

கலைஞர் 100
1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 71 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 03 – வெள்ளிக்கிழமை 20 அக்டோபர் 2023 – கோவை ★★ 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 71: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 03 - Friday 20 October 2023 - Kovai ★★ 10 Pages ₹ 5.00


## நாவலூர் சுங்கச் சாவடியில் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது!

# அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு மின் கட்டணம் குறைப்பு!

### 2-வது நாள் நடைபெற்ற “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்ட ஆய்வுக் கூட்டத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (18.10.2023) செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் கூட்டரங்கில், “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசு துறைச் செயலாளர்கள், துறை தலைவர்கள், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல்நாத், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.த.பிரபு சங்கர், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**மறைமலைநகர், அக். 20-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (18.10.2023) செங்கல்பட்டு மாவட்டம், மறைமலை நகர், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் கூட்டரங்கில், “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

**இக்கூட்டத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இரண்டு முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார். அதில் “சென்னை அருகே நாவலூர் சுங்கச் சாவடியில் சுங்கக் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது” என்றும், “அடுக்கு மாடி குடியிருப்புகளில் பொது பயன்பாட்டிற்கு செலுத்தப்பட வேண்டிய மின் கட்டணம் குறைக்கப்படுகிறது” என்றும் கூறினார்.**

இக்கூட்டத்தில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

இன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தின்போது அரசின் முக்கிய திட்டங்கள் எந்த அளவுக்கு களத்தில் மக்களை சென்றடைந்து வருகின்றன என்பதையும், இன்னும் அந்தத் திட்டங்களை எவ்வாறெல்லாம் சிறப்பாக நடை முறைப்படுத்தலாம் என்பதற்கான ஆலோசனைகள் எல்லாம் குறித்து இங்கே நாம் விவாதித்திருக்கிறோம்.

**உங்களின் சிறப்பான பணியால் மக்களிடம் சென்றடைந்த திட்டங்கள்!**

மக்களை நேரடியாக சந்தித்து அரசு திட்டங்களைக் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பில் உள்ள அரசு அலுவலர்களாகிய நீங்கள் அளித்து வரும் சிறப்பான செயல்பாட்டினால், இந்த அரசு பொறுப்பேற்றது முதல் வகுத்துத் தரும் திட்டங்கள் சீரிய வகையிலும், பொதுமக்கள் போற்றும் வகையிலும் அவர்களை சென்றடைந்து வருகின்றன. குறிப்பாக கடந்த மாதம் நடைமுறைப்படுத்தப்பட்ட “மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்” அறிவிக்கப்பட்ட குறுகிய காலத்திற்குள் உங்கள் அனைவரின் பங்களிப்பால் திறம்பட செயலாக்கப்பட்டு, சில தினங்களுக்கு முன் இரண்டாவது தவணைத் தொகையையும் அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். இது மட்டுமல்ல இன்னும் எண்ணற்ற திட்டங்கள் குறிப்பாக;

**“புதுமைப் பெண் திட்டம்”**
**“மக்களைத் தேடி மருத்துவம்”**
**“முதல்வரின் முகவரி”**
**“நான் முதல்வன்”**

இது போன்ற பெரும் வரவேற்பைப் பெற்ற திட்டங்கள் உங்களது சிறப்பான பணியினால் மக்களை சென்றடைந்துள்ளது. அதற்காக உங்கள் அனைவரையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**சமூக நலத்திட்டங்களை விரைந்து நிறைவேற்ற வேண்டும்!**

இன்றைய ஆய்வுக் கூட்டத்தின் போது நாம் முக்கியமான திட்டப் பணிகளின் செயலாக்கம் குறித்து ஆய்வு செய்தோம். குறிப்பாக, மாநகராட்சி சாலைப் பணிகள், நகராட்சிகளில் மேற்கொள்ளப்படும் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், புதிய பேருந்து நிலையங்கள் அமைத்தல், பள்ளி செல்லாக் குழந்தைகளை பள்ளிக் கல்வித் துறை மூலம் கண்காணித்தல், மகளிர் சுய உதவிக் குழுக்களின் பணிகள் என பல்வேறு பணிகளைக் குறித்தும் நாம் ஆய்வு செய்தோம். இவ்வகை திட்டப்பணிகள் குறிப்பாக சாலைப் பணிகள், குடிநீர் திட்டங்கள், பாலங்கள், சமூக நலத் திட்டங்கள் ஆகியவற்றை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றித் தருவதுதான் நமது இலக்காக இருக்க வேண்டும். பெரும்பாலான பணிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றப்பட்டு வருவதை காண முடிந்தாலும், ஒருசில பணிகளில் தொய்வு இருந்ததையும் நாம் கவனித்தோம். அதற்கான விளக்கத்தையும், அது குறித்து என்ன செய்யப்படுகிறது என்பதையும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், துறைத் தலைவர்களும் தெரிவித்தார்கள். அதன்படி நீங்கள் அனைத்து திருத்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டு பணிகளை விரைந்து முடிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

> **“தினமும் குறிப்பாக நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காலை பத்திரிகைகளை படிக்கவேண்டும். ஊடகங்களை தொடர்ந்து நீங்கள் பார்க்கவேண்டும். அப்படி பார்த்தால்தான், என்ன நாட்டில் நடக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடியும். குறிப்பாக உங்கள் மாவட்டத்தில் என்ன பிரச்சினை? என்பதை நீங்கள் உடனடியாக புரிந்து கொள்ள முடியும். அப்படி உங்களது மாவட்டங்களைப் பற்றி ஏதாவது செய்திகள் வந்தால், அந்த செய்திகளுக்கு உடனே பரிகாரம் காணவேண்டும். பரிகாரம் காண்பது மட்டுமல்ல, அது எந்த வகையில் பரிகாரம் காணப்பட்டிருக்கிறது என்பதை ஊடகங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் நீங்கள் தெரியப்படுத்த வேண்டும்.”**

திட்டங்களில் காலதாமதம் ஏற்படுவதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி நான் முந்தைய ஆய்வுக் கூட்டங்களில் தெரிவித்ததையே மீண்டும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**ஏழை - எளிய - பழங்குடியின மக்களுக்கான திட்டங்கள்!**

அது என்னவென்றால், அரசின் உட்கட்டமைப்பு பணிகள் பெரும் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படுகின்றன. அவை ஒரு குறிப்பிட்ட

**தொடர்ச்சி 4 ஆம் பக்கம்**

## காசா பகுதியில் நிகழும் போர் பதைபதைக்க வைத்துள்ளது!

# அனைத்துலக நாடுகளும் இக்கொடும் போரை நிறுத்த வேண்டும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் - சமூக வலைதளப் பதிவில் உருக்கமிகு வேண்டுகோள்!

சென்னை, அக்.20–

போர் என்பதே கொடூரமானது. காசா பகுதியில் நிகழும் போர் உலக மக்கள் அனைவரையும் பதைபதைக்க வைத்துள்ளது. ஐக்கிய நாடுகள் அவையும், அனைத்துலக நாடுகளும் ஓரணியில் நின்று இக்கொடும் போரை நிறுத்த வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் உருக்கமிகு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்திருப்பதாவது:–

**போர் என்பதே கொடூரமானது!**

**அது எந்த நோக்கத்துக்காக யாரால் நடத்தப்பட்டாலும், அதில் முதல் பலியாவது அப்பாவி பொதுமக்கள் தான். கடந்த பத்து நாட்களாக #Gaza பகுதியில் நிகழும் போர், உலக மக்கள் அனைவரையும் பதைபதைக்க வைத்துள்ளது. உயிருக்குப் பயந்து இலட்சக் கணக்கான மக்கள் வெளியேறுவதும், மொத்தமாக அழிக்கப்பட்ட குடியிருப்புகளும், கடும் காயமடைந்த குழந்தைகளின் அழுகுரலும், குடிநீர் - உணவின்றித் தவிப்போரின் வேதனையும் இதயமுள்ளோர் அனைவரையும் கலங்க வைத்துள்ளன.**

**போரின்போது மருத்துவமனைகள் தாக்கப்படுதல் கூடாது என்பதையும் மீறி மருத்துவமனை தாக்கப்பட்டு நூற்றுக்கணக்கானவர் மரணம் அடைந்துள்ளார்கள். மனிதம் மரத்துப் போய் விட்டதா?**

**உலக சமுதாயம் இனியும் இதைக் கைகட்டி வேடிக்கை பார்க்கக் கூடாது.**

**ஐக்கிய நாடுகள் அவையும், அனைத்துலக நாடுகளும் ஓரணியாக நின்று இக்கொடும் போரை நிறுத்த வேண்டும். அப்பாவி பொதுமக்களின் உயிர்களைக் காக்க வேண்டும்.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உருக்கமுடன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## இஸ்ரேல் போர்!

# 23 தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர்!

*சென்னை, அக்.20-*

*இஸ்ரேலில் இருந்து சிறப்பு விமானம் மூலம் டெல்லி வந்தடைந்த மேலும் 23 தமிழர்கள், தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர்.*

*இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் வெடித்துள்ள நிலையில், அங்குள்ள இந்தியர்கள் சிறப்பு விமானங்கள் மூலம் அழைத்து வரப்பட்டு வருகின்றனர். அதன்படி, 286 இந்தியர்களுடன் 5வது விமானம் டெல்லி வந்தடைந்த நிலையில், அதில் 23 தமிழர்கள் இடம்பெற்றிருந்தனர்.*

*இந்நிலையில், அவர்கள் சிறப்பு விமானம் மூலம் தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர். 23 தமிழர்களில் 17 பேர் சென்னை விமான நிலையம் வந்தடைந்தனர். அவர்களை, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி வரவேற்றார்.*

**தமிழ்நாடு அரசுக்கு நன்றி!**

*இஸ்ரேலில் இருந்து தமிழ்நாட்டிற்கு திரும்பிய வர்கள், கடந்த ஒருவார காலமாக தமிழ்நாடு அரசு தங்களுடன் தொடர்புகொண்டு, அங்குள்ள சூழலை கேட்டறிந்ததாகவும், அதன்பின்னர், தங்களை எந்த வித பாதிப்பும் இல்லாமல் மீட்டு, தமிழ்நாடு அழைத்து வந்துள்ளனர் என்றும் தெரிவித்தனர். தங்களை பத்திரமாக மீட்க நடவடிக்கை எடுத்த தமிழ்நாடு அரசுக்கும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.*

**கோவையில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் வரவேற்றார்!**

*இஸ்ரேலிலிருந்து டெல்லி வந்த தமிழர்களில், கோவையைச் சேர்ந்த 4 பேர் சிறப்பு விமானம் மூலம் அழைத்து வரப்பட்டனர். அவர்களை கோவை விமான நிலையத்தில், அமைச்சர் செஞ்சி மஸ்தான் வரவேற்றார்.*

*பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான், இஸ்ரேலில் இருந்து தமிழ்நாடு அரசைத் தொடர்பு கொண்டு உதவிகோரும் தமிழர்களை, அவர்கள் வீடுகளுக்கு பத்திரமாகக் கொண்டு சேர்க்கும் பணியில் அரசு தீவிரமாக ஈடுபட்டு வருவதாக தெரிவித்தார்.*

*இதுவரை 132 தமிழர்கள் தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளதாகவும், வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்வோர், அரசிடம் முறையாக பதிவு செய்துவிட்டு செல்ல வேண்டும் என்றும் அமைச்சர் செஞ்சி மஸ்தான் அறிவுறுத்தினார்.*

## நிலக்கரி இறக்குமதியில் அதானி நிறுவனம் ரூ.12,000 கோடி முறைகேடு

# அதானி முறைகேட்டை ஒன்றிய அரசு ஏன் விசாரிக்கவில்லை?

### காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி கேள்வி!



*புதுடெல்லி, அக்.20-*

*நிலக்கரி இறக்குமதியில் அதானி நிறுவனம் ரூ.12,000 கோடி முறைகேடு செய்துள்ளது. அதானி முறைகேட்டால் இந்தியாவில் மின் கட்டணம் உயர்வுக்கு வருகிறது.*

*அதானி முறைகேட்டால் நாட்டு மக்கள் கூடுதல் மின் கட்டணம் செலுத்த வேண்டிய நிலையும் ஏற்படுகிறது. அதுமட்டுமல்ல, அதானி நிறுவனத்திற்கு ஆதரவாக பிரதமர் மோடி செயல்படுகிறார். ஆனால் அதானி நிறுவன முறைகேட்டை ஒன்றிய அரசு ஏன் விசாரணை நடத்தவில்லை? மக்களின் வருமானம் அதானியின் பாக்கெட்டுகளுக்கு நேரடியாக செல்கிறது என ராகுல் காந்தி கடுமையாகச் சாடியுள்ளார்.*

*அதானி நிறுவனத்தின் முறைகேட்டால் நாட்டு மக்கள் கூடுதல் மின்கட்டணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார். மக்களின் அத்தனை வருமானங்களும் அதானியின் பாக்கெட்டுகளுக்கு நேரடியாக செல்கிறது என்றும் அவர் விமர்சித்துள்ளார்.*

*டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி, நிலக்கரி இறக்குமதியில் அதானி குழுமத்தின் முறைகேடு தொடர்பாக “பைனான்சியல் டைம்ஸ்” பத்திரிகை வெளியிட்டுள்ள கட்டுரையை சுட்டிக்காட்டி ஒன்றிய அரசுக்கும், பிரதமர் மோடிக்கும் அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினார்.*

*இந்தோனேசியாவில் இருந்து நிலக்கரி இறக்குமதி செய்ததில், அதானி நிறுவனம் மிகப்பெரிய அளவில் முறைகேடு செய்திருப்பதாக அவர் கூறினார்.*

*குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியை, 52 சதவிகிதம் வரை விலை உயர்த்தி, அதானி நிறுவனம் விற்பனை செய்துள்ளது. இதன் மூலம் அதானி நிறுவனம் 2 ஆண்டுகளில் 12 ஆயிரம் கோடி ரூபாய் கொள்ளை லாபம் பார்த்துள்ளது. அதானி நிறுவனத்தின் இந்த முறைகேட்டால் நாட்டு மக்கள் கூடுதல் மின்கட்டணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக ராகுல் காந்தி குற்றஞ்சாட்டினார்.*

*மக்களின் அத்தனை வருமானங்களும் அதானியின் பாக்கெட்டுகளுக்கு நேரடியாக செல்கிறது என்றும் அவர் விமர்சித்தார்.*

*அதானியை பிரதமர் மோடி பாதுகாப்பதால், முறைகேடுகள் அரங்கேறுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். அதானி குழும முறைகேட்டில் பிரதமர் மோடி வாய் திறக்காதது ஏன்? அதானி நிறுவனத்தின் நிலக்கரி இறக்குமதி முறைகேடு குறித்து ஒன்றிய அரசு இதுவரை ஏன் விசாரணைக்கு உத்தரவிடவில்லை என்றும் ராகுல் காந்தி கேள்வி எழுப்பினார்.*

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 20-10-2023

# நாற்காலிச் சண்டை

“சட்டமன்றத்தில் மக்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பேசாமல் யாருக்கு எந்த இடம் என்ற நாற்காலிச் சண்டையில் ஈடுபட்டுக் கிடக்கிறது” - என்று பழனிசாமியை விமர்சித்துள்ளார் விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள். அதுதான் முழு உண்மை ஆகும்.

**சட்டமன்றத்தில் ஒரே ஒரு பிரச்சினைக்காகத்தான் வேகவேகமாக பேசுவார் பழனிசாமி. அது தனக்குப் பக்கத்தில் யார் உட்காருவது என்பதுதான். தனக்குப் பக்கத்தில் பன்னீர்செல்வம் உட்கார்ந்திருப்பது பழனிசாமிக்கு பிடிக்கவில்லை. அதற்கு என்ன செய்ய முடியும்? அவர் ஒருங்கிணைப்பாளராக இருந்த கட்சிக்குத் தானே பழனிசாமி இணை ஒருங்கிணைப்பாளராக இருந்தார்? அவருக்கு துணை முதலமைச்சர் கொடுத்து வைத்துக் கொண்டவரும் இவர்தானே?**

**யாரை எங்கே உட்கார வைக்க வேண்டும் என்பது சபாநாயகரின் உரிமை, விருப்பம் சார்ந்தது - என்று பேரவைத் தலைவர் அப்பாவு சொல்லிவிட்டார். இதனை புரிந்துக்கொள்ளும் தன்மை பழனிசாமிக்கு இல்லை.**

“உறுப்பினர் ஓ. பன்னீர்செல்வம் உட்பட 11 பேர் இந்த அவையில் இரட்டை இலைச் சின்னத்தில் வெற்றி பெற்று வந்து, இரட்டை இலைக்கு எதிராக Floor test-ல் ஓட்டுப் போட்டதற்குப் பிறகு, Tenth Schedule of the Indian Constitution-படி அவர்களை பதவி நீக்கம் செய்திருக்க வேண்டும். அதை அப்போது செய்யவில்லை. அவர்கள் தேவையென்றால் வைத்துக்கொள்கின்றார்கள். தேவையில்லையென்று சொன்னால் அவர்கள் இஷ்டத்திற்கு முடிவெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு petition-ஐக் கொடுத்ததற்கு 18 எம்.எல்.ஏ.க்களை அ.தி.மு.க. ஆட்சியில் பதவி நீக்கம் செய்திருக்கின்றார்கள். ஆனால், எதிர்த்து ஓட்டு போட்டவர்கள் -மீது எந்த நடவடிக்கையும் அவர்கள் எடுக்கவில்லை” என்று பழனிசாமி காலத்தை நினைவூட்டி இருக்கிறார் பேரவைத் தலைவர் அப்பாவு.

**“அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட பன்னீர்செல்வம் உள்ளிட்டோரை தகுதி நீக்கம் செய்ய வேண்டும். சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் இருக்கையில் இருந்து பன்னீர்செல்வத்தை மாற்றிவிட்டு ஆர்.பி.உதயகுமாருக்கு இடம் அளிக்க வேண்டும்”** என்று இப்போது சட்டசபையில் எழுப்பியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி. இந்த பிரச்சினையில் அமளியில் ஈடுபட்ட அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவையில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

“இந்த விவகாரத்தில் சபாநாயகர் அப்பாவு நடுநிலையுடன் செயல்படவில்லை” என ஜெயக்குமார் குற்றம் சாட்டியிருக்கிறார். நடுநிலை என்றால் என்ன? அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் நடந்து கொண்ட நடுநிலைமையின் கதையை அறிவோமா?

2001 சட்டமன்றத் தேர்தல் நடைபெற்ற போது ஜி.கே.மூப்பனார் தலைமையில் த.மா.கா. செயல்பட்டு வந்தது. அந்த தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றது த.மா.கா. காங்கிரஸ் கட்சிக்கும் சேர்த்து ஜெயலலிதாவிடம் மூப்பனார் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தினார். அதன்படி 47 தொகுதிகளை ஜெயலலிதா ஒதுக்கினார். அதில், 15 தொகுதிகளைக் காங்கிரஸுக்குக் கொடுத்தார் மூப்பனார்.

தேர்தலில் அ.தி.மு.க. வென்றது. த.மா.கா. 23 இடங்களிலும் காங்கிரஸ் 7 இடங்களிலும் வெற்றி பெற்றன. கொஞ்ச நாளிலேயே மூப்பனார் மறைந்தார். த.மா.கா.வுக்கு புதிய தலைவராக ஜி.கே.வாசன் நியமிக்கப்பட்டார். சிறிது காலத்திற்குப் பிறகு த.மா.கா.வை காங்கிரஸுடன் இணைக்க வாசன் முடிவு செய்தார். 2002-இல் மதுரையில் காங்கிரஸ் கட்சியில் த.மா.கா. முறைப்படி இணைந்தது. இரு கட்சிகளின் இணைப்புக்கு கிள்ளியூர் தொகுதி த.மா.கா. எம்.எல்.ஏவான குமாரதாஸ் எதிர்ப்பு தெரிவித்தார். அவருடன் இன்னும் சில த.மா.கா. எம்.எல்.ஏ-களும் சேர்ந்து கொண்டனர்.

காங்கிரசுடன் த.மா.கா. இணைந்தாலும் தங்களை த.மா.கா. எம்.எல்.ஏக்களாகவே கருத வேண்டும் என்று அன்றைய சபாநாயகர் காளிமுத்துவிடம் இந்த ஐந்து அதிருப்தி த.மா.கா. எம்.எல்.ஏக்களும் கடிதம் கொடுத்தனர். அதாவது அவர்களை ஆளும் கட்சியான அ.தி.மு.க. பின்னால் இருந்து இயக்கியது. ‘5 த.மா.கா. அதிருப்தி எம்.எல்.ஏக்கள் தொடர்ந்து த.மா.கா. எம்.எல்.ஏக்களாகவே செயல்படுவார்கள். த.மா.கா. என்று ஒரு கட்சியே இல்லை என்று தேர்தல் ஆணையம் அறிவித்தால் அப்போது இந்த 5 எம்.எல்.ஏக்களின் பதவி குறித்து முடிவு செய்யப்படும்” என்று சபாநாயகர் காளிமுத்து அறிவித்தார். இணைப்புக்குப் பிறகு த.மா.கா.வின் அங்கீகாரத்தை தேர்தல் ஆணையம் ரத்து செய்தது.

த.மா.கா. அங்கீகாரத்தைத் தேர்தல் கமிஷன் ரத்து செய்த நிலையில், குமாரதாஸ் உள்ளிட்ட 5 எம்.எல்.ஏக்களை எக்கட்சியையும் சேராதவர்கள் என்று அறிவிக்க வேண்டும் என சட்டசபை காங்கிரஸ் தலைவர் எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் கோரிக்கை வைத்தார். இந்த விவகாரத்தில் சபாநாயகர் காளிமுத்து நடுநிலையாகச் செயல்படவில்லை. அன்றைய முதல்வர் ஜெயலலிதாவின் கண்ணசைவுக்கு ஏற்றார் போல நடந்து கொண்டார். “குமாரதாஸ் உள்ளிட்ட 5 எம்.எல்.ஏக்களும் தனி அணியாகச் செயல்படுவர். அவர்கள் த.மா.கா. எம்.எல்.ஏக்களாகவே கருதப்படுவார்கள். அவர்களுக்குச் சட்டசபையில் தனி இடம் ஒதுக்கப்படும்” என்று சபாநாயகர் காளிமுத்து அறிவித்தார். ‘சட்டசபையைப் பொறுத்தவரை எனது முடிவே இறுதியானது” என்றார். ஐந்து பேரும் த.மா.கா.விலேயே நீடிப்பார்கள் என்று காளிமுத்து கூறியதன் மூலம் தேர்தல் கமிஷனால் நீக்கப்பட்ட த.மா.கா. சட்டமன்றத்தில் மட்டும் செயல்படும் நிலைக்கு தள்ளப்பட்டது.

குமாரதாஸ் உள்ளிட்ட 4 பேரை கட்சி தாவல் சட்டத்தின் கீழ் எம்.எல்.ஏ. பதவியில் இருந்து நீக்க வேண்டும் சென்னை உயர் நீதிமன்றத்தில் காங்கிரஸ் சார்பில் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் மனு தாக்கல் செய்தார். விளக்கம் அளிக்குமாறு சபாநாயகர் காளிமுத்துவுக்குச் சென்னை உயர் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியது. ஆனால் எந்த பலனும் ஏற்படவில்லை.

இதேபோலத்தான் 2011 - 2016 ஆட்சிக் காலத்திலும் அ.தி.மு.க. நடந்து கொண்டது.

**2011 - 2016 அ.தி.மு.க. ஆட்சியில் தே.மு.தி.க-வின் 29 எம்.எல்.ஏ-களில் சிலர் தொகுதிப் பிரச்சினைக்காக (?) ஜெயலலிதாவைச் சந்தித்து அவரை ஆதரித்த அவலம் நடந்தது. மாஃபா பாண்டியராஜன், தமிழழகன், அருண் சுப்பிரமணியன், அருண் பாண்டியன், மைக்கல் ராயப்பன், சாந்தி, சுந்தரராஜன், சுரேஷ் ஆகியோருக்கு சிவப்புக் கம்பளம் விரித்து சட்டசபையில் அவர்களுக்குத் தனியாக இருக்கைகளும் பேச வாய்ப்புகளும் கொடுத்தவர் சபாநாயகர் ஜெயக்குமார். பிறகு ஜெயக்குமார் சபாநாயகர் நாற்காலியில் இருந்து தூக்கப்பட்ட பிறகு வந்த தனபாலும் அதே பாதையில் பயணித்தார்.**

**இதுதான் அ.தி.மு.க. அன்று நடந்து கொண்ட முறை. எனவே, நடுநிலையை பற்றி யாருக்கும் பாடம் எடுக்கும் தகுதி அ.தி.மு.க.வுக்கு இல்லை.**

**நாளையோ - நாளை மறுநாளோ பழனிசாமியும் - பன்னீர் செல்வமும் ஓரணி ஆக மாட்டார்கள் என்று சொல்ல முடியுமா? இவர்கள் விருப்பத்துக்குத் தகுந்த மாதிரி வாசலை மாற்றிக் கட்ட முடியுமா?**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.10.2023) செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் கூட்டரங்கில், “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில், பல ஆண்டுகளாக அரசு நிலங்களில் வீடுகளைக் கட்டி குடியிருப்போருக்கு ஒருமுறை வரன்முறை செய்யும் திட்டத்தின் கீழ் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டதில், கிராமக் கணக்குகளில் உரிய மாறுதல் மேற்கொள்ளப்படாமல் இருந்த பட்டாக்கள் சரி செய்யப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, 16,496 பட்டாக்கள் கிராம கணக்குகளில் மாறுதல் செய்யப்பட்டு, அதற்கான பட்டாக்களை வழங்கிடும் அடையாளமாக 15 பயனாளிகளுக்கு கிராம கணக்குகளில் மாறுதல் செய்யப்பட்ட பட்டாக்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசு துறைச் செயலாளர்கள், துறை தலைவர்கள், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல்நாத், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.த.பிரபு சங்கர், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பல ஆண்டுகளாக அரசு நிலங்களில் வீடு கட்டி குடியிருப்போருக்கு

# கிராமக் கணக்குகளில் மாறுதல் செய்யப்பட்ட பட்டாக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - மறைமலைநகரில் நடைபெற்ற “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டக் கூட்டத்தில் பயனாளிகளுக்கு வழங்கினார்!

**மறைமலைநகர், அக். 20 -**

**பல ஆண்டுகளாக அரசு நிலங்களில் வீடுகளைக் கட்டி குடியிருப்போருக்கு ஒருமுறை வரன்முறை செய்யும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களில், கிராமக் கணக்குகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள கோரிய பொதுமக்களின் கோரிக்கையை முதல்வர் நிறைவேற்றினார். “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்ட ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கிராம கணக்குகளில் மாறுதல் செய்யப்பட்ட பட்டாக்களை பயனாளிகளுக்கு வழங்கினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.10.2023) செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் கூட்டரங்கில், “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில், பல ஆண்டுகளாக அரசு நிலங்களில் வீடுகளைக் கட்டி குடியிருப்போருக்கு ஒருமுறை வரன்முறை செய்யும் திட்டத்தின் கீழ் வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டதில், கிராமக் கணக்குகளில் உரிய மாறுதல் மேற்கொள்ளப்படாமல் இருந்த பட்டாக்கள் சரி செய்யப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, 16,496 பட்டாக்கள் கிராம கணக்குகளில் மாறுதல் செய்யப்பட்டு, அதற்கான பட்டாக்களை வழங்கிடும் அடையாளமாக 15 பயனாளிகளுக்கு கிராம கணக்குகளில் மாறுதல் செய்யப்பட்ட பட்டாக்களை வழங்கினார்.

### குடியிருப்புகளை வரன்முறைப்படுத்த நடவடிக்கை!

நீர்வழிப் புறம்போக்கு நிலங்கள், மேய்ச்சல், மந்தைவெளி, மயானம் மற்றும் பாட்டை என வகைப்பாடு செய்யப்பட்ட அரசு நிலங்கள் அத்தகைய உபயோகத்தில் இல்லாமல் நத்தமாக உபயோகத்தில் இருந்து அதில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக வீடுகளைக் கட்டி குடியிருப்போருக்கு அந்நிலங்கள் அரசின் உபயோகத்திற்கு தேவை இல்லை எனில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர் ஆகியோரைக் கொண்ட குழு அந்த நிலங்களை தணிக்கை செய்து உள்ளாட்சி மன்றங்களில் தீர்மானங்களை பெற்று தகுதியின் அடிப்படையில் குடியிருப்புகளை வரன்முறைப்படுத்த தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டது.

மேலும், சென்னை புறநகர்ப் பகுதி, நகராட்சி மற்றும் மாநகராட்சி எல்லைக்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட தடையாணையும் ஒருமுறை மட்டுமே வரன்முறை செய்து வீட்டுமனை ஒப்படை வழங்கும் திட்டத்திற்கு முன்னர் தளர்வு செய்யப்பட்டது.

மேற்படி அரசாணைகளின் அடிப்படையில், மாநிலம் முழுவதும் ஆட்சேபனை உள்ள மற்றும் ஆட்சேபனையற்ற அரசு நிலங்களில் வீடுகள் கட்டி பத்தாண்டுகளுக்கு மேலாக குடியிருப்பவருக்கு வீட்டுமனை ஒப்படை வழங்க ஏதுவாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் செயல்முறை ஆணைகள் வழங்கப்பட்டு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

### பொதுமக்களின் கோரிக்கை பரிசீலிப்பு!

அவ்வகையில், 2000 2011 காலகட்டங்களில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் கிராமக் கணக்குகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு நத்தம் அடங்கலில் ஏற்றப்படாததால், தங்களால் அதிகாரப்பூர்வமான பரிவர்த்தனை/வங்கி கடன் பெற இயலவில்லை என்று திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட பொதுமக்களிடமிருந்தும் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தும் தொடர்ந்து கோரிக்கைகள் வரப்பெற்றன.

இக்கோரிக்கைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, மேற்கண்ட வீட்டு மனைப் பட்டாக்களின் கிராமக் கணக்குகளில் உரிய திருத்தங்கள் மேற்கொண்டு, பட்டா வழங்கப்பட்ட விவரங்களை கிராம நத்தம் அடங்கல் மற்றும் வட்ட அலுவலகங்களில் பராமரிக்கப்படும் கணினி மயமாக்கப்பட்ட நத்தம் தரவுகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளும் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் அறிவுறுத்தினார்.

### செங்கல்பட்டு – காஞ்சிபுரம் மாவட்ட மக்களுக்கு பட்டா வழங்கல்!

அதன்படி, முதற்கட்டமாக செங்கல்பட்டு மாவட்டத்தில் 8136 பட்டாக்களும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 3949 பட்டாக்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 4411 பட்டாக்களும், என மொத்தம் 16,496 பட்டாக்கள் கிராம கணக்குகளில் மாறுதல் செய்யப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் நேற்று நடைபெற்ற கள ஆய்வில் முதலமைச்சர் திட்ட ஆய்வுக் கூட்டத்தில் 15 பயனாளிகளுக்கு கிராம கணக்குகளில் மாறுதல் செய்யப்பட்ட பட்டாக்களை வழங்கினார்.

மேலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 3256 பட்டாக்களும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 9 பட்டாக்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 197 பட்டாக்களும், என மொத்தம் 3462 பட்டாக்கள் கிராமக் கணக்குகளில் மாறுதல் செய்யும் பணிகள் நடை பெற்று வருகின்றன. இப்பணிகளும் விரைவில் நிறைவு பெறும்.

இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசு துறைச் செயலாளர்கள், துறை தலைவர்கள், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர. ராகுல்நாத், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.த.பிரபு சங்கர், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருச்சி மாவட்ட மாநகர கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில், பள்ளி மாணவர்களுக்கான மாவட்டம் தழுவிய முத்தமிழ் அறிஞர் கலைஞரின் கவிதை, திரைப்பட வசனம் ஒப்பித்தல் போட்டி மற்றும் கலைஞரின் திரைப்படங்கள் காட்சிப் படுத்துதல் நிகழ்வு மாவட்ட அணி தலைவர் மணிமாறன், மாவட்ட அமைப்பாளர் எஸ்.வி.ராஜ்குமார் மற்றும் மாநகர அமைப்பாளர் டி.செந்தில் ஆகியோர் தலைமையில் திருச்சி இ.ஆர்.மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் மாநில கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர், மாநில பகுத்தறிவு பேரவை செயலாளர் வண்ணை அரங்கநாதன், திருச்சி மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் பங்கேற்றனர். பாரதிதாசன் நன்றி உரையாற்றினார். இந்நிகழ்வில் லீலாவேலு, மூக்கன், சந்திரமோகன், பொன் செல்லையா, பகுதி கழகச் செயலாளர் மோகன், ஆர்.ஜி.பாபு, ராஜ் முஹம்மது மற்றும் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட மாநகர நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சனாதனம் ஒழிக்கப்பட வேண்டியதுதான்! சொல்லப்பட்ட கருத்திலிருந்து பின் வாங்கவில்லை!

# நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கவே வழக்கு!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தாக்கல் செய்த பதில் மனுவில் - உயர்நீதிமன்றத்தில் அனல் பறந்த வாதம்!

## ‘பேரலை’ இணையதளத்தில் ‘கோடாங்கி’ சிறப்புச் செய்தி!

**‘பேரலை’ இணைய தள தொலைக்காட்சியில் ஒளிபரப்பிய ‘கோடங்கி’ சிறப்பு செய்தி வருமாறு:–**

சனாதனம் ஒழிக்கப்பட வேண்டியதுதான் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதற்குப் பிறகு, அவர் எப்படி அமைச்சராகத் தொடரலாம் – அவர் அமைச்சர் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று வழக்கு ஒன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டது.

அதனை இந்து முன்னணியைச் சேர்ந்த நிர்வாகி ஒருவர் தொடுத்திருந்தார். அந்த வழக்கில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தனது பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்திருக்கிறார்.

அந்த பிரமாணப் பத்திரத்தில், “நான் அமைச்சராக பேசவில்லை, தனிப்பட்ட முறையில் என்னுடைய கருத்துகளைத்தான் பேசினேன்” என்று சொல்லி இருப்பதாக ஒரு “வதந்தி” – உலா வந்து கொண்டிருக்கிறது. உண்மையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தன்னுடைய பிரமாணப் பத்திரத்தில் என்ன குறிப்பிட்டு இருக்கிறார்? தன்னுடைய சொந்தக் கருத்து என்றும், அதைப்பற்றி யாருக்கும் பேசுவதற்கு உரிமை இல்லை என்றும் சொன்னாரா? அல்லது இந்தக் கருத்துகளில் பின் வாங்காமல் தன்னுடைய நிலையை உறுதிப்படுத்தி இருக்கிறாரா என்பதைப் பற்றித்தான் இன்றைய கோடாங்கி!

தங்கவேல் என்பவருடைய மகன் மனோகர் என்பவர் தொடர்ந்த வழக்கில்தான் இந்த விசாரணை இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீதிபதி அனிதா சுமந்த் இதனை விசாரித்துக் கொண்டிருக்கிறார். இந்த வழக்கில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தன்னுடைய பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்திருக்கிறார்.

அதில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியது தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில், தன்னுடைய விளக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அமைச்சர் உண்மையில் பின்வாங்கினாரா, இல்லையா? என்பதைப் பற்றி பார்ப்பதற்கு முன்னால் அமைச்சர் குறிப்பிட்டிருக்கக் கூடிய ஒரு கருத்து, இங்கே சுட்டிக்காட்டபட வேண்டிய தேவை இருக்கிறது.

**தமிழ்நாட்டில் காலுன்ற ஆர்.எஸ்.எஸ். முயற்சி!**

**இந்த வழக்கை பதிவு செய்தவர், தன்னை இந்து முன்னணியின் நிர்வாகி என்று காட்டிக் கொண்டிருக்கிறார். வெளிப்படையாக அதனை ஒப்புக் கொள்கிறார். ஆக, இந்து முன்னணி என்பது ஆர்.எஸ்.எஸ்.சின் கிளை அமைப்பு, தமிழ்நாட்டில் எப்படியாவது கால் ஊன்றிவிட வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ்.சினுடைய சங்பரிவார் அமைப்புகள் தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றன. அப்படி முயற்சி செய்யும் அமைப்புகளில் முக்கியமானதாக கருதப்படுவது இந்து முன்னணி அமைப்பு. பி.ஜே.பி.க்கும் இவர்களுக்கும் அரசியல் ரீதியாக கருத்தியல் ரீதியாக பல்வேறு ஒற்றுமைகளும் பல்வேறு தொடர்புகளும் இருப்பது வெளிப்படையான உண்மை.**

**நீதிமன்றத்திற்கு அவப் பெயரை ஏற்படுத்த முயற்சி!**

எனவே இந்த வழக்கு முழுக்க முழுக்க அரசியல் ரீதியாக குற்றம் சாட்டவேண்டும் என்று தொடரப்பட்ட வழக்குதானே தவிர, உண்மையில் இந்த வழக்கை இந்த நீதிமன்றத்தில் விசாரிப்பதே இந்த

## பிரதமர் - அமித்ஷாவை பதவி நீக்கம் செய்வார்களா?

நீதிமன்றத்தின் மாண்பைக் குலைப்பதாக இருக்கிறது. நீதி மன்றத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் இந்த வழக்கைத் தொடர்ந்திருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டி இருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்!

மாண்பமை நீதிமன்றத்தின் மூலமாக அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் எழுப்பப்பட்ட காலம் காலமான கேள்விகளை எல்லாம் இங்கு தீர்த்துக் கொள்ளலாம் என்று இப்போது இங்கே வந்து இருக்கிறார்கள் என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்.

திராவிட இயக்கம் என்பது சமூக நீதி, சுயமரியாதை, பகுத்தறிவுச் சிந்தனை, சகோதரத்துவம் ஆகியவற்றை வலியுறுத்துகிறது. ஆனால் எதிர் மனுதாரர்களோ சாதி ரீதியான பிளவுகளை ஆதரித்து பேசுபவர்கள். அதே வேளையில் இந்த அமைப்பு

> தப்புத்தப்பாக வதந்திகள் இப்போது பரப்பப்படுகின்றன. அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மன்னிப்பு கேட்டுவிட்டார் என்று. உண்மையில் இந்த பிரமாணப் பத்திரத்தில் மன்னிப்பை விட சனாதனம் ஏன் ஒழிக்கப்படவேண்டும் என்ற விளக்கம்தான் மேலோங்கி இருக்கிறது என்பதே தவிர, எந்த இடத்திலும் மன்னிப்பு கோரப்படவில்லை, எந்த இடத்திலும் சொல்லப்பட்ட கருத்திலிருந்து பின்வாங்கவில்லை என்பதை வில்சன் இந்த பிரமாணப் பத்திரம் மூலமாகவும் தன்னுடைய வாதங்களின் மூலமாகவும் உறுதியாகத் தெரிவித்திருக்கிறார் சென்னை உயர் நீதிமன்றத்தில்!

பி.ஜே.பி.யோடு நேரடியாக தொடர்புடைய அமைப்பாகவும், பி.ஜே.பி.க்கு ஆதரவு அளிக்கும் அமைப்பாகவும் அறியப்படுகிறது. இந்த அமைப்பின் ஆதரவைப் பெற்ற பி.ஜே.பி. தமிழ்நாட்டின் அரசியல் அரங்கத்தில் தி.மு.க.வுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறது.

**நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கிறார்கள்!**

அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் மக்கள் மன்றத்தில் உரையாடப்பட வேண்டியவற்றையெல்லாம், தொடர்ந்து நீதிமன்றத்தின் மூலம் நடத்துவதற்கு இந்த அமைப்புகள் திட்டமிட்டு இந்த வழக்கை தொடர்ந்திருக்கிறார்கள். அரசியல் அரங்கத்தில் இந்தக் கருத்துக்கள் எடுபடாமல் தொடர்ந்து தோற்று ஓடிக் கொண்டிருக்கும் பி.ஜே.பி. நீதிமன்றத்தின் மூலமாக எந்த விதமான நீதிபரிபாலனக் கேள்விகளும் இல்லாத ஒரு வழக்கை எடுத்து வந்து நீதிமன்றத்தின் நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.




மக்கள் மன்றத்தில் இந்தப் பிரச்சினையை விவாதமாக்கி இருக்க வேண்டும், நீதிமன்றம் என்பது அரசியல், கருத்தியல், இறையியல் கேள்விகளுக்கு பதில் சொல்லும் மன்றம் அல்ல, இவை எல்லாம் மக்கள் மன்றத்தில் வைத்து பேசப்பட வேண்டியவை. உங்களுக்கு துணிச்சல் இருந்தால் மக்கள் மன்றத்தில் என்னைச் சந்தித்து இந்த விவாதங்களை நடத்துங்கள், ஏன் நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கிறீர்கள் என்ற கேள்வியைத்தான் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுப்பி இருக்கிறார்!

**நான் திராவிட இயக்கத்தின் கொள்கை வாரிசு!**

மக்கள் பெரும்பான்மையானவர்கள் என்னை ஆதரிக்கிறார்கள். திராவிட இயக்கத்தை ஆதரிக்கிறார்கள். அதனால்தான் எனக்கு வாக்களித்து எனக்கு இந்தப் பொறுப்பை வழங்கி இருக்கிறார்கள். மேலும் இந்த திராவிட இயக்கத்தின் கொள்கை வாரிசாக நான் இந்தச் சிந்தனைகளையெல்லாம் பேச வேண்டும் என்பதுதான் மக்களின் எதிர்பார்ப்பு.

**தி.மு.க.வின் அடிப்படையான கொள்கைகளும் இதுதான். நான் திராவிட இயக்கத்தின் ஒலியேந்தியாக முன்னின்று பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். நான் பேசுவது எல்லாம் திராவிட இயக்கத்தின் முன்னோடிகளாகிய தந்தை பெரியார், பேறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் பின்பற்றுபவைதான்.**




**இதைத்தான் அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய அண்ணல் அம்பேத்கர் பேசியிருக்கிறார். நான் பேசியது மக்கள் எதிர்பார்ப்பு. நான் பேசியது மக்களுக்கு நான் ஆற்றவேண்டிய கடமை. இதிலிருந்து நான் பின்வாங்க வேண்டிய அவசியமில்லை என்று சுட்டிக்காட்டி யிருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.**

மேலும் இந்த வாதத்தில் அரசியலமைப்பு சட்டப் பிரிவு 25 ஐ மீண்டும், மீண்டும் சுட்டிக் காட்டிக் கொண்டே இருக்கிறார்கள். அரசியலமைப்பு சட்டப் பிரிவு 25 என்ன சொல்கிறது என்றால், ஒரு மதத்தை பின்பற்றுவதற்கும் மறுப்பதற்குமான உரிமை பற்றிப் பேசுகிறது. அதேவேளையில் அரசியலமைப்பு சட்டப் பிரிவு 25 என்னுடைய உளச்சான்றின் படி பணியாற்றுவதற்கான உரிமையை எனக்கு வழங்கி இருக்கிறது.

அதன் அடிப்படையில் நான் கடவுள் மறுப்புக் கொள்கையை பின்பற்றுவதற்கும் எனக்கு உரிமை உண்டு. அதை நான் பின்பற்றுகிறேன் என்ற காரணத்தினாலேயே நான் ஒரு மதத்தை எதிர்க்கிறேன் என்று அர்த்தம் அல்ல. அந்த மதத்தில் இருக்கக் கூடிய அழுக்கான சில விஷயங்களைச் சுட்டிக்காட்டுவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. அந்தக் கடமையும், பொறுப்பும் எனக்கு இருக்கிறது என்று விளக்கம் அளித்திருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

**நீதிமன்றத்தில் வைத்து விவாதிக்கப்பட வேண்டிய பொருள் அல்ல!**

இந்த வழக்கைப் பொறுத்தவரையில், கோவ் – வாரண்டோ (Quo Warranto) என்னும் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த கோவ் – வாரண்டோ என்பது என்னுடைய நியமனத்தில் ஏதாவது சிக்கல் இருந்தால் அதில் கேள்வி எழுப்பலாம், அல்லது நான் ஏற்றுக் கொண்ட உறுதிமொழிக்கு விரோதமாக செயல்பட்டிருந்தால் அதிலிருந்து கேள்வி எழுப்பலாம், இல்லாவிட்டால் என்னை பதவி நீக்கம் தான் செய்யப்பட வேண்டும் என்றாலுங்கூட அது முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படக் கூடியதே தவிர, நீதிமன்றத்தில் வைத்து விவாதிக்கப்படக் கூடிய பொருள் அல்ல, முதலமைச்சர் ஆளுநருக்கு கடிதம் எழுதி என்னை அமைச்சரவை பொறுப்பில் இருந்து நீக்கலாம், ஆனால் அந்தப் பொறுப்பிலிருந்து நீக்குவதற்கு சில அடிப்படையான முகாந்திரங்களை மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951 இல் குறிப்பிட்டிருக்கிறது.

அதில் இருக்கக் கூடிய எந்தச் சட்டத்தின் அடிப்படையிலும் நான் தகுதி இழக்கவில்லை. தகுதி இழக்காத என்னை பதவி நீக்கச் சொல்லி கோருவது அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது என்று சுட்டிக்காட்டி இருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

**பா.ஜ.க. அரசு மீது நேரடி தாக்குதல் நடத்தியிருக்கிறார்!**

**மேலும் இந்தக் கருத்துகளுக்கெல்லாம் என்னை பதவி நீக்க வேண்டும் என்றால் சில முக்கிய முன் உதாரணங்களை சுட்டிக் காட்டுகிறேன் என்று ஒன்றிய பி.ஜே.பி. அரசை நேரடியாக தாக்கி இருக்கிறார்கள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும் மக்களவை உறுப்பினரும் இந்த வழக்கின் வழக்கறிஞருமாக செயல்பட்டு வரும் எம்.பி. வில்சனும்.**

**இந்த வழக்கில் நீங்கள் தீர்ப்பளிக்கும் போது அது ஒன்றிய அமைச்சரவையையும் நேரடியாகப் பாதிக்கும் என்பதை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அது யூனியன் கேபினட்டில் இருக்கக் கூடிய 42 சதவிகித பேரின் மீது தீவிரமான குற்றச் செயலிலான வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன.**

**33 கேபினட் அமைச்சர்களில் 4 பேர் மீது கொலை வழக்கோ அல்லது கொலை முயற்சி வழக்கோ நிலுவையில் இருக்கிறது. தனிப்பட்ட கருத்துகளையோ அல்லது, ஒரு மதம் குறித்த கருத்துகளையோ விட தீவிரமான மக்கள் விரோத சிந்தனைகளைக் கொண்டிருக்கிறது இந்த வழக்குகள் எல்லாம், ஆக, இந்த கோவ் – வாரண்டோ என்பது இந்த அமைச்சர்களின் மீதும் இப்போது விதிக்கப்படுமா? என்பது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுப்பி இருக்கும் கேள்வி.**

மக்களுக்கு விரோதமாக; குறிப்பாக சிறுபான்மையினர் ஆகிய இஸ்லாமியர்களுக்கு எதிராக டெல்லியினுடைய சட்டப்பேரவைத் தேர்தல் 2020 இன் போது அமைச்சர் அனுராக் தாக்கூர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பர்வேஷ் வர்மா ஆகியோர் பேசிய கருத்துகள் எப்போது கவனத்தில் கொள்ளப்படும். அவர்கள் மக்களுக்கு விரோதமாக இஸ்லாமியர்களுக்கு விரோதமாக மதத்திற்கு விரோதமான கருத்துகளைப் பேசியதற்கும் இதே கோவ் – வாரண்டோ பிறப்பிக்கப்படுமா?

உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் இருக்கிறது. ஒன்றிய உள்துறை அமைச்சராகிய அமித்ஷா, ஒன்றிய பிரதமராகிய நரேந்திர மோடி ஆகியோரும் கூட மதச்சார்பின்மைக்கு விரோதமான கருத்துக்களை மக்கள் மன்றத்தில் பேசி இருக்கிறார்கள். அவர்களுக்கு எதிராகவும், இதே கோவ் – வாரண்டோ மனு பிறப்பிக்கப்படுமா என்ற கேள்வியை இந்த மனுதாக்கல் செய்த இந்து முன்னணிக் காரரை நோக்கி கடுமையாக எழுப்பி இருக்கிறது இந்த பிரமாணப் பத்திரம்.

மேலும் உதயநிதி ஸ்டாலின் சனாதன ஒழிப்பு மாநாட்டில் பேசிய கருத்துகளை விட பலமடங்கு வீரியமான கருத்துகளை இந்த மனுவில் அவர் குறிப்பிட்டிருக்கிறார். மனுஸ்மிருதியில் பெண்களுக்கு எதிராகவும் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு எதிராகவும் அவர்கள் குறிப்பிட்டு இருக்கக் கூடிய வாதங்களை முன்வைத்து இருக்கிறார்.

**மனுஸ்மிருதியில் குறிப்பிடப்பட்டிருப்பது என்ன?**

ஒரு பெண்ணானவள் வீட்டில் குழந்தையாகவோ, அல்லது இளம் பெண்ணாகவோ அல்லது வயது முதிர்ந்த பெண்ணாகவோ இருந்தாலும்கூட சுதந்திரமாக எந்தச் செயலையும் செய்யக் கூடாது. ஒரு குழந்தை தந்தையின் கட்டுப்பாட்டிலும், ஒரு இளம் பெண் கணவனின் கட்டுப்பாட்டிலும் ஒரு விதவைப்பெண் இறந்து போன தன்னுடைய கணவனுக்குப் பிறந்த மகன்களின் கட்டுப்பாட்டிலும் இருக்க வேண்டும் என்று மனுஸ்மிருதியில் சேப்டர் 5 ஸ்லோகங்கள் 148 மற்றும் 149 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஸ்லோகம் 145 இல் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் எல்லா விதமான அறமும் கெட்டு காமத்தில் பலியாக எல்லா நல்ல செயல்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டவனுமாக, மிகவும் கேவலமான செயல்களில் ஈடுபடுபடுபவராக இருந்தால் கூட ஒரு நல்ல பெண் அந்தக் கணவனை கடவுளாக நினைத்து வணங்க வேண்டும் என்று இந்து ஸ்லோகத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்பதை இந்த மனுவில் குறிப்பிட்டு இருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

ஸ்லோகம் 168 இல் குறிப்பிடப்பட்டதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஒரு பெண் தன்னுடைய கணவன் உயிருடன் இருந்தாலும், அல்லது இறந்தாலும் அவனுக்குக் கட்டுப்பட்டவளாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடும் இதே மனுஸ்மிருதி, ஒரு ஆண் தன்னுடைய மனைவி இறந்த பிறகு எந்தத் தீக்கு தன்னுடைய மனைவியை இரையாக்கினானோ அதே தீயில் இன்னொரு பெண்ணை மணந்து கொள்ளலாம் என்று சுட்டிக்காட்டியிருக்கிறது என்பதை இந்த மனுவில் விளக்கி இருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

**சூத்திரர் ஒருவர் பிராமணருக்குச் சேவை செய்து அடிமையாக வாழ வேண்டும்!**

மேலும் Munusmiriti On Lower Castes என்னும் தலைப்பில் 21, 22 சேப்டர் 8இல் ஸ்லோகம் மனுஸ்மிருதியில் குறிப்பிடப்பட்டிருப்பதை குறிப்பிட்டு இருக்கிறார்.

சூத்திரர் ஒருவர் கல்வி கற்றால், அல்லது சூத்திரர் ஒருவர் சட்டத்தைப் பற்றி பேசினால், அந்த அரசு சகதியில் விழுந்த பசுவைப் போல மூழ்கி அழிந்து போகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இருப்பிறப்பாளர்களுக்கு எப்போதும் சேவை செய்பவர்களாக சூத்திரர்கள் இருக்க வேண்டும் என்று சேப்டர் 8 இல் இருக்கும் ஸ்லோகம் 410 குறிப்பிடுகிறது.

ஸ்லோகம் 413 ம், 414 ம் என்ன சொல்கிறது என்றால் ஒரு சூத்திரர் ஒருவர் அடிமைவாழ்வு வாழ வேண்டும். பிராமணர்க்கு சேவை செய்து அடிமையாக வாழ வேண்டும். தன்னுடைய முதலாளி அவருக்கு விடுதலை கொடுத்தாலுங் கூட அவர் தன்னுடைய அடிமை வாழ்வில் இருந்து விடுதலை பெற முடியாது. ஏனென்றால் அவர் பிறப்பால் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறார். யாரால் அதை நீக்க முடியும் என்று சொல்கிறது 413 மற்றும் 414 ஆவது ஸ்லோகங்கள்.

மேலும் ஒரு சூத்திரர் ஒருவர் பணம் சம்பாதிக்க வழி இருந்தாலும் அவர் சம்பாதிக்கக் கூடாது. அப்படி சம்பாதித்தால் பிராமணர்களுக்கு எதிரானதாக அது மாறி விடும் என்று மனுஸ்மிருதியில் ஸ்லோகம் 129 சேப்டர் 8 இல் குறிப்பிடப்பட்டிரு க்கிறது.

பிராமணர் ஒருவர் பாலோ, உப்போ அல்லது கறியோ விற்றால் அவர் மூன்று நாட்களில் சூத்திரராக மாறி விடுவார் என்று பகுதி 10 ஸ்லோகம் 92இல் சுட்டிக்காட்டியிருக்கிறது.

> - திராவிட இயக்கத்தின் கொள்கை வாரிசு நான்!
> - நான் பேசுவதெல்லாம் திராவிட இயக்க முன்னோடிகள் பின்பற்றியவை தான்!
> - கடவுள் மறுப்புக் கொள்கையை பின்பற்ற எனக்கு உரிமை உண்டு!
> - தி.மு.க.வின் பொறுப்பாளராக, ஒரு அமைச்சராக பேச வேண்டிய பொறுப்பு எனக்கு உண்டு!
> - நான் பேசியது மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமை; இதிலிருந்து நான் பின்வாங்க வேண்டிய அவசியமில்லை!
> - பிரதமர் மோடி - அமித்ஷா ஆகியோரும் கூட மதச்சார்பின்மைக்கு விரோதமான கருத்துகளை மக்கள் மன்றத்தில் பேசியுள்ளனர். அவர்களுக்கு எதிராக கோவ் - வாரண்டோ பிறப்பிக்கப்படுமா?

மனுஸ்மிருதியில் ஒரு பிராமணருக்கு எதிரான கருத்தை சூத்திரர் ஒருவர் கொண்டிருந்தால் அவர் நரகத்திற்கு போவார். பிராமணர் ஒருவரை சூத்திரர் ஒருவர் மிரட்டினால் நூறு ஆண்டுகள் நரக வாழ்வும், அவரை அடித்து விட்டால் ஆயிரம் ஆண்டுகள் நரக வாழ்வும் அவருக்கு விதிக்கப்படும் என்று இந்த மனு தர்ம சாஸ்திரத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

ஒவ்வொருவருக்குமான தண்டனை ஒவ்வொரு மாதிரியாக வழங்கப்பட்டிருக்கிறது. பகுதி 8 ஸ்லோகம் 267, 268இல் குறிப்பிடப்பட்டிருப்பது, ஒரு பிராமணர்க்கு எதிரான குற்றச் செயலுக்கு சத்திரியருக்கு 100 பணம் அபராதமும், வைசியருக்கு 150 பணம் அல்லது அபராதமும், சூத்திரர்க்கு மரண தண்டனையும் விதிக்கப்பட வேண்டும் என்று சொல்கிறார்கள்.

பிறப்பின் அடிப்படையில் ஒருவர் மீது இழைக்கப்படும் குற்றத்திற்கு தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. சத்திரியன் ஒருவருக்கு எதிரான குற்றத்தை பிராமணர் செய்தால் அவருக்கு அபராதம் 50 பணம், ஒரு வைசியருக்கு எதிரான குற்றத்தை பிராமணர் செய்தால் அபராதம் 25 பணம்.

ஆனால் சூத்திரர்க்கு எதிரான குற்றத்தைச் செய்தால் அவருக்கு அபராதம் 12 பணம். இதுதான் இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் மனு நீதி. ஒருவர் மூன்று உலகத்தையும் கொன்று அழித்திருந்தாலும், அவர் பிறருடைய உணவைப் பிடுங்கித் தின்றிருந்தாலும் கூட பிராமணருக்கு அதனால் எந்தவிதமான பாவமும் கிடையாது. அவர் ரிக்வேதத்தை மனதில் வைத்திருந்தால் இவற்றில் இருந்தெல்லாம் அவர் விமோசனம் பெற்றுவிடுவார் என்று மனுநீதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

> இந்த வழக்கு முழுக்க முழுக்க அரசியல் ரீதியாக குற்றம் சாட்ட வேண்டும் என்று தொடரப்பட்ட வழக்குதானே தவிர, உண்மையில் இந்த வழக்கை இந்த நீதிமன்றத்தில் விசாரிப்பதே இந்த நீதிமன்றத்தின் மாண்பைக் குலைப்பதாக இருக்கிறது. நீதி மன்றத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் இந்த வழக்கைத் தொடர்ந்திருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டி இருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்!

இந்த மனுநீதிகள் எல்லாம், அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் தூக்கி எறியப்பட்டிருக்கின்றன. அதுவும் ஆர்ட்டிகள் 25 இன் அடிப்படையில் தான் நடைபெற்று இருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

**டாக்டர் அம்பேத்கர் கூறியது என்ன?**

மேலும் டிசம்பர் 25, 1927 ஆம் ஆண்டு டாக்டர் அம்பேத்கர் மனுஸ்மிருதியை மகத் சத்தியாகிரகத்தில் (Mahad Satyaqraha) கொளுத்தினார். காரணம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான உரிமை கோரி அவர் போராடினார். பொதுக்குளத்தில் நீர் எடுக்கும் அந்தப் போராட்டத்தில் மனுஸ்மிருதி எரிக்கப்பட்டதற்கான காரணம் இவைதான்.

**இந்து மதச் சட்டங்களின் அடிப்படையில் இந்த ஒடுக்குமுறைகளை எல்லாம் நாம் தீவிரமாக எதிர்க்க வேண்டும். அநீதியை மட்டுமே போதிக்கின்ற இந்த எழுத்துகளை எல்லாம் தீயிட்டு கொளுத்த வேண்டும். மதத்தையும் அடிமைத்தனத்தையும் நாம் ஒரு காலமும் பொறுத்துக் கொள்ள முடியாது என்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுதிய அண்ணல் அம்பேத்கர் குறிப்பிட்டு இருக்கிறார். இதன் அடிப்படையில் தான் நானும் பேசியிருக்கிறேனே தவிர இதற்கு சற்றும் குறைவாக நான் பேசவில்லை என்று உறுதியாகத் தெரிவித்து இருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.**

**மேலும் இதே போன்ற சட்டங்களுக்கு எதிராக தமிழ்நாடு ‘தமிழ்நாடு கோயில் நுழைவு அங்கீகாரச் சட்டம், 1947, தமிழ்நாடு தேவதாசிகள் (அர்ப்பணிப்பு தடுப்பு) சட்டம், 1947, இந்து திருமண (தமிழ்நாடு) (திருத்தம்) சட்டம், 1967 (இடை சாதி திருமணங்களை ஊக்குவிக்க சுய மரியாதை திருமணங்களை கொண்டு வந்தது)**

**தமிழ்நாடு இந்து வாரிசுரிமை (திருத்தம்) சட்டம் 1989 (TN சட்டம் 1 இன் 1990) பெண்களுக்கு சம உரிமை வழங்கும் பிரிவுகள் 29A முதல் 29 C வரையிலான இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் அத்தியாயம் IIA ஐ அறிமுகப்படுத்துகிறது**

**– என்று பல்வேறு சட்டங்களையும் இதன் அடிப்படையில் தான் நாமும் நிறைவேற்றி இருக்கிறோம் அதன் அடியொற்றித்தான் நானும் பேசியிருக்கிறேன்.இதை பேச வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது என்று விரிவாகப் பேசியிருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.**

**இருபது பக்கத்திற்கு அவர் தாக்கல் செய்திருக்கும் பிரமாணப் பத்திரத்தின் பல்வேறு ‘புள்ளிகள்’ குறிப்பிடப்பட்டு இருக்கின்றன. 51 ‘புள்ளிகள்’ அவற்றில் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன. அதில் ஒவ்வொரு வரியும் சனாதனம் ஏன் ஒழிக்கப்படவேண்டும் என்பதை இன்னும் தீவிரமாகவும் ஒன்றிய அரசு எப்படி மக்களின் மீது ஒடுக்குமுறையை நிகழ்த்துகிறது. மத சிறுபான்மையினர் மீது தாக்குதலை நடத்துகிறது. ஒன்றிய அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் மீது எவ்வளவு குற்ற வழக்குகள் இருக்கின்றன. எவ்வளவு பேர் கொலைப் படுபாதக குற்றங்களில் ஈடுபட்டு இருக்கிறார்கள் எனபதையெல்லாம் இந்த பிரமாணப் பத்திரத்தில் விரிவாக தாக்கல் செய்திருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.**

இதில் எந்த இடத்திலும் என்னுடைய தனிப்பட்ட கருத்து என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தன்னுடைய கருத்தை கூறவே இல்லை. ஒரு அமைச்சராக, தி.மு.க.வின் பொறுப்பாளராக இவற்றிற்கு எதிராக பேச வேண்டிய கடமையும் பொறுப்பும் எனக்கு இருக்கிறது, அண்ணல் அம்பேத்கர் தந்த அரசியலமைப்புச் சட்டத்தை பின்பற்றி வாழும் இந்த நாட்டில் ஒவ்வொருவருக்கும் அந்தக் கடமை இருக்கிறது அந்தக் கடமையைத்தான் நான் செய்தேன் என்பதைத்தான் இந்த வழக்கில் குறிப்பிட்டு இருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

ஒருவேளை ஒருவருடைய தனிப்பட்ட நம்பிக்கைக்கு எதிரான ஒரு சட்டத்தை அரசு இயற்றும் என்றால், அதன் மீது ஒருவர் வழக்குத் தொடரலாம். அதாவது ஒருவர் தனிப்பட்ட வாழ்க்கையில் ஒரு மதத்தைப் பின்பற்றுகிறார். அந்த மதத்தை பின்பற்றவே கூடாது என்று ஒரு அரசு சட்டத்தை இயற்றினால் அதற்கு எதிராக பேசலாம், ஆனால் அரசியல் மேடையில் பேசப்பட்ட கருத்துகளை நீதிமன்றத்தில் எடுத்து வந்து, சம்பந்தமே இல்லாத ஒரு வழக்கை தாக்கல் செய்து, கோவ் – வாரண்டோ ரிட் மனுவை தாக்கல் செய்து இந்த வழக்கை நடத்திக் கொண்டிருப்பது நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிப்பது, நீதிமன்றத்தின் மாண்பை கெடுப்பது எந்தவகையிலும் சட்டத்திற்கு உட்படாதது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

**சொல்லப்பட்ட கருத்திலிருந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பின்வாங்கவில்லை!**

தப்புத்தப்பாக வதந்திகள் இப்போது பரப்பப்படுகின்றன. அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மன்னிப்பு கேட்டுவிட்டார் என்று. உண்மையில் இந்த பிரமாணப் பத்திரத்தில் மன்னிப்பை விட சனாதனம் ஏன் ஒழிக்கப்படவேண்டும் என்ற விளக்கம்தான் மேலோங்கி இருக்கிறது என்பதே தவிர, எந்த இடத்திலும் மன்னிப்பு கோரப்படவில்லை, எந்த இடத்திலும் சொல்லப்பட்ட கருத்திலிருந்து பின்வாங்கவில்லை என்பதை வில்சன் இந்த பிரமாணப் பத்திரம் மூலமாகவும் தன்னுடைய வாதங்களின் மூலமாகவும் உறுதியாகத் தெரிவித்திருக்கிறார் சென்னை உயர்நீதிமன்றத்தில்!

என்ன நடக்கிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம்!

இவ்வாறு ‘பேரலை’ இணையதள தொலைக்காட்சி ‘கோடங்கி’ சிறப்பு ஒளிபரப்பில் குறிப்பிட்டு இருந்தது.



"கள ஆய்வில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் ஆய்வு மேற்கொள்வதற்காக செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர் செல்லும் வழியில், 17.10.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை சந்தித்த மாணவன் சந்தோஷின் தாயார், தனது மகன் முதலமைச்சர் அவர்களை சந்திக்க விரும்புவதாக தெரிவித்ததையடுத்து, நேற்று முன்தினம் (18.10.2023) ஆய்வுக் கூட்டத்திற்குச் செல்லும் வழியில் முதலமைச்சர் அவர்களை மாணவன் சந்தோஷ் சந்தித்த போது," திருக்குறள் உரை புத்தகம் வழங்கி வாழ்த்தினார்.



கோயம்புத்தூர் மாவட்டம், வ.உ.சி மைதானத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா இதழாளர் கலைஞர் குழுவின் சார்பில் இதழாளர் கலைஞர் சிறப்பு புகைப்படக் கண்காட்சி அரங்கத்தினை நேற்று முன்தினம் (18.10.2023) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில், விழாக் குழுத் தலைவர் / அமைச்சர் மு.பெ.சாமிநாதன் , இணைத் தலைவர்கள் – அமைச்சர் செஞ்சி. கே. எஸ்.மஸ்தான் , அமைச்சர் த.மனோ தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் பாரதிய வித்யா பவன் மற்றும் குமரகுரு கல்வி நிறுவனங்கள் தலைவர் டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் திறந்து வைத்து பார்வையிட்டார். அதுபோது விழாக் குழு உறுப்பினர் செயலர்– செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் த.மோகன் , மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்தி குமார் பாடி, நாடாளுமன்ற உறுப்பினர் .பி.ஆர்.நடராஜன், இதழாளர் கலைஞர் குழுவின் உறுப்பினர்கள் .என்.ராம் (ஹிந்து நாளிதழ்) நக்கீரன் கோபால், பாபுஜெயகுமார்(டெக்கான் க்ரோனிக்கல் நாளிதழ்) அருண்ராம் (டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழ்) .கோவி.லெனின் (பத்திரிக்கையாளர்), .எம்.குணசேகரன்(எடிட்டர் சன் டிவி), செந்தில்வேலவன்(வேல்வீச்சு), மேயர் திருமதி.கல்பனா ஆனந்தகுமார், துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

# வளர்ச்சிக்கான திட்டங்களை குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்ற வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

பணி முடிவடையாதபோது திட்டத்திற்கான செலவு அதிகரிப்பதோடு, நிறைவேறாத பணிகளினால் அந்தப் பகுதி மக்கள் பாதிப்புக்கும் உள்ளாகிறார்கள். எனவே, எக்காரணம் கொண்டும் இது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

கட்டுமானப் பணிகள் குறிப்பிட்ட கால அளவிற்குள் முடிவடைய வேண்டும் என்பது போல் நலத்திட்டங்களும், குறிப்பாக விளிம்பு நிலை, பட்டியலின மற்றும் பழங்குடியின மக்கள் நலன் கருதி செயல்படுத்தப்படும் திட்டங்கள் எந்தவித குறை பாடுகளுமின்றி முழுமையாக குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கண்காணிக்க வேண்டும்.

இந்த அரசு ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் மிகுந்த கவனம் செலுத்துகிறது. எனவே, அனைத்து துறைத் தலைவர்களும் தங்கள் துறை மூலமாக நடைமுறைப்படுத்தப்படும் வாழ்வாதாரத் திட்டங்களில் கூடுதல் கவனம் செலுத்துமாறு உங்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**முறையாக செயல்படுகிறதா என உறுதி செய்ய வேண்டும்!**

குறிப்பாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலமாக இலக்கு மக்களின் குடும்பங்களை மேம்படுத்துவது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலை கோரும் அனைத்துத் தரப்பு மக்களும் அதிக அளவில் பயன்பெறுவதை உறுதி செய்வது,முதல் தலைமுறை பட்டதாரிகள் சுயதொழில் தொடங்க கடனுதவி பெற வழிவகை செய்வது, போன்ற பலவழிகளிலும் ஏழை, எளிய மற்றும் விளிம்பு நிலை மக்கள் வாழ்வில் வளம்பெற நீங்கள் உதவமுடியும்.

பொதுமக்கள், குறிப்பாக ஏழை எளிய, நடுத்தர மக்கள் அரசு திட்டங்களின் பயனைப் பெறுவதோடு வழிகாட்டுதல்களையும் பெற வேண்டும். அதிலும் குறிப்பாக மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் நான் முதல்வன் திட்டத்தில் பயன்பெறுவது, பள்ளி, கல்லூரி அளவில் மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்புகளுக்கு வழிகாட்டுதல், அவர்களுக்கான கல்வி உதவித் தொகை பெறுவதையும், அவர்கள் வசிக்கும் அரசு மாணவர் விடுதிகள் முறையாக செயல்படுவதை உறுதி செய்வதையும் உங்கள் முக்கிய பணிகளில் ஒன்றாக நீங்கள் கருதவேண்டும்.

**இரண்டு முக்கிய அறிவிப்புகள்!**

**இந்த நல்ல தருணத்தில் நான் இரண்டு முக்கிய அறிவிப்புகளை இந்தக் கூட்டத்தின் வாயிலாக வெளியிட விரும்புகிறேன்;**

**• முதலாவதாக, தென் சென்னைப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, இந்த அரசு பதவி ஏற்றவுடன், இராஜீவ் காந்தி தகவல் தொழில்நுட்பச் சாலையில் உள்ள பெருங்குடி கட்டணச் சாவடியில் சாலைப் பயன்பாட்டு கட்டணம் வசூல் செய்வது கைவிடப்பட்டது. இதனால், இப்பகுதி வழியாக செல்வோரும், தகவல் தொழில் நுட்பத் துறையில் பணிபுரிவோரும் பெரும் பயனடைந்தனர். தற்போது இந்த சாலையில் மெட்ரோ ரயில் பணிகள் மிக விரைவாக நடைபெற்று வருகின்றன. இதனால் சாலையின் பல பகுதிகள் பணிகளுக்காக மூடப்பட்டுள்ளன. இதனால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இதே சாலையில் நாவலூரில் உள்ள கட்டண சாவடியிலும் கட்டணம் வசூலிக்கக் கூடாது என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்று, நாளை முதல் நாவலூர் கட்டண சாவடியிலும் கட்டணம் வசூலிப்பது நிறுத்தி வைக்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.**

**• இரண்டாவதாக, சென்னை மாநகரம் மற்றும் பிற மாநகராட்சிகளை ஒட்டியுள்ள புறநகர் பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் சிறு அடுக்குமாடிக் குடியிருப்புகள் (smallapartments) உள்ளன. அண்மையில், தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் மின்கட்டண முறையை மாற்றி அமைத்தபோது, இந்த குடியிருப்புகளின் பொது விளக்கு வசதிகள், நீர் இறைக்கும் மோட்டார்கள் போன்ற பொதுப் பயன்பாட்டு பணிகளுக்கான மின்கட்டணங்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்கான கட்டண முறைக்கு மாற்றப்பட்டுள்ளன. இதனால் பொது வசதிகளுக்கான மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டிற்கு எட்டு ரூபாய்க்கு மேல் செலுத்த வேண்டியுள்ளது. இக்குடியிருப்புகளில் வசிக்கக்கூடிய நடுத்தர மக்களை இது பெரிதும் பாதிப்பதாக உள்ளது என்று பல்வேறு குடியிருப்போர் நலச்சங்கங்கள் தெரிவித்துள்ள அடிப்படையில், இதனை பரிசீலித்து, பத்து வீடுகள் அல்லது அதற்கு குறைவாகவும், மூன்று மாடிகள் அல்லது அதற்கு குறைவாகவும் உள்ள மின்தூக்கி வசதி இல்லாத குடியிருப்பு களுக்கு, பொதுப் பயன்பாட்டிற்கான புதிய சலுகைக் கட்டணமுறை ஒன்று நடைமுறைப்படுத்தப் படும். இதன்கீழ், பொதுப் பயன்பாட்டிற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் ஒரு யூனிட்டிற்கு எட்டு ரூபாயிலிருந்து ஐந்து ரூபாய் 50 பைசாவாக குறையும். இதனால் மாநிலம் எங்கும் உள்ள சிறு குடியிருப்பு களில் வசிக்கும் நடுத்தர மக்கள் பயனடைவார்கள்.**

'மக்களுக்காக இயங்கும் இந்த அரசு அவர்களை நோக்கிச் செல்வதன் ஒரு முயற்சி தான் இந்த கள ஆய்வில் முதலமைச்சர் என்ற ஆய்வுக் கூட்டம். நேற்றைய தினம், பல்வேறு துறைகளின் உயர் அலுவலர்கள் இந்த மாவட்டங்களில் பயணம் மேற்கொண்டு திட்ட செயலாக்கம் பற்றி நேரடியாக அறிந்து உங்களிடம் ஆலோசனை கூட்டம் நடத்தி இருப்பார்கள். அதன் அடிப்படையில், அரசின் திட்டங்கள் மேலும் செம்மைபடுத்தப்படும் என்று உறுதியாக நம்புகிறேன். இன்றைய ஆய்வுக் கூட்டத்தில் நீங்கள் அளித்த வாக்குறுதிகள் அவைகளை எல்லாம் நீங்கள் மேற்கொண்டு வரும் பணிகளை குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் சிறப்பாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னொரு முக்கிய மாக நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புவது, தினமும் குறிப்பாக நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காலை பத்திரிகைகளை படிக்கவேண்டும். ஊடகங்களை தொடர்ந்து நீங்கள் பார்க்கவேண்டும். அப்படி பார்த்தால்தான், என்ன நாட்டில் நடக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடியும். குறிப்பாக உங்கள் மாவட்டத்தில் என்ன பிரச்சினை? என்பதைநீங்கள் உடனடியாக புரிந்துகொள்ள முடியும். அப்படி உங்களது மாவட்டங்களைப் பற்றி ஏதாவது செய்திகள் வந்தால், அந்த செய்திகளுக்கு உடனே பரிகாரம் காணவேண்டும். பரிகாரம் காண்பது மட்டுமல்ல, அது எந்தவகையில் பரிகாரம் காணப்பட்டிருக்கிறது என்பதை ஊடகங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் நீங்கள் தெரியப்படுத்த வேண்டும். அதை காலை முதல் dutyஆக வைத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மக்களுக்கு சேவையாற்றும் உன்னத பணியினை சிறப்பாக மேற்கொள்க!**

**இந்த அரசு ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் மிகுந்த கவனம் செலுத்துகிறது. எனவே, அனைத்து துறைத் தலைவர்களும் தங்கள் துறை மூலமாக நடைமுறைப்படுத்தப்படும் வாழ்வாதாரத் திட்டங்களில் கூடுதல் கவனம் செலுத்துமாறு உங்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.**

அரசிற்கும் மக்களுக்கும் பாலமாக விளங்கி, அரசின் திட்டங்களை, சேவைகளை அவர்களிடம் கொண்டு சேர்க்கும் உன்னத பணியினை தொடர்ந்து சிறப்பாக மேற்கொண்டு, அரசுக்கும் உங்கள் மாவட்ட நிர்வாகத்திற்கும் நல்ல பெயரை ஈட்டித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டு, அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசு துறைச் செயலாளர்கள், துறை தலைவர்கள், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.த.பிரபு சங்கர், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## "மகளிர் உரிமை மாநாடு மட்டற்ற மகிழ்வில் தமிழ்நாடு"

மாபெரும் மகளிர் மாநாடு
மாண்புற நடந்தது சிறப்போடு...
கோபுரம் போலே உயர்ந்து
குன்றென நின்றது தமிழ்நாடு...

தளபதி முன்னே வழிகாட்ட - மகளிர்
தலைவியாய் கனிமொழி ஒளியூட்ட
விளக்காய் இந்திய நாட்டிற்கே நல்
வெளிச்சம் தந்திட்ட மாநாடு...

அன்னை சோனியா சொன்னதுபோல்
அனைத்திற்கும் வழிகாட்டி தமிழ்நாடே...
என்னே மாநாட்டுப் பெருமை...
ஏற்பாடு அனைத்துமே அருமை...

இந்தியா கூட்டணி வென்றால்தான்
இமயமாய் ஒளிரும் இந்தியா...
சிந்தனை செயல்களை ஒன்றிணைக்க
சிறப்புற முனைவார் நம் தளபதி

எதிரியை வெல்வது ஒன்றுதான்
இப்போது நமது இலட்சியம்
நிதானம் காட்டி செயல்பட்டால்
நிலைக்கும் வெற்றி நிச்சயம்!...

சாத்தான்களை வீழ்த்தி வென்றிட
சரியான தருணம் இதுவே
பூத்திட வேணும் வெற்றி
காத்திட வேணும் இந்தியாவை...

சிறுசிறு வேற்றுமை இருந்தாலும்
சிந்தனை நமக்கு ஒன்றுதான்...
நேரிய முறையில் உழைத்து
நேர்மை வெற்றியைப் பெற்றிடுவோம்!

கவிஞர்
**இ.ரவி பாரதி**





சிவகாசி அருகில் சித்தநாயக்கன்பட்டியில் பட்டாசு ஆலையில் மருந்து உராய்வு ஏற்பட்டு 2ஆண்கள் உட்பட 12 பெண்கள் வெடி விபத்தில் இறந்து விட்டார்கள். விபத்து ஏற்பட்டவர்களை விருதுநகர் அரசு மருத்துவமனையில் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, சி.வி.கணேசன் ஆகியோர் நேரில் சென்று இறந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடம் ஆறுதல் கூறினர். உடன் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன், விருதுநகர் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் இருந்தனர்.



மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் கருங்காலக்குடி அரசு பள்ளியில் பயிலும் 17 மாணவ – மாணவியர் பள்ளி முடிந்து வீட்டுக்குச் செல்லும் வழியில் சரக்கு வாகனத்தில் பயணம் செய்த போது எதிர்பாராத விதமாக விபத்து ஏற்பட்டு காயம் அடைந்தனர். விபத்தில் காயம் அடைந்தவர்களை மதுரை அரசு ராஜாஜி மருத்துவ மனையில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், பூமிநாதன், பெரியபுள்ளான் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் நேற்று முன்தினம் (18.10.2023), ஆலந்தூர் மண்டலம், புதுத் தெருவில் (New Street) ஆலந்தூர் மண்டல அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கான இடத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் ஜெ.ராதாகிருஷ்ணன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய், தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி.அமித், மண்டலக் குழுத் தலைவர் என். சந்திரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தவறு யார் செய்திருந்தாலும் அவர்கள் மீது

# கடுமையான நடவடிக்கை எடுத்து சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவோம்!

## சென்னிமலையில் ஆய்விற்குப் பின் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!



ஈரோடு, அக்.20-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (18.10.2023) ஈரோடு மாவட்டம், சென்னிமலை, சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருக்கோயில் மேம்பாட்டு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

சென்னிமலை, சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலானது சுமார் 700 ஆண்டுகளுக்கு முற்பட்ட பல்வேறு சிறப்புகளை பெற்ற திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு நானும், அமைச்சர் சாமிநாதன் அவர்களும் ஏற்கனவே ஆய்வு செய்திட வந்த போது திருக்கோயிலுக்கு இளைப்பாறும் மண்டபம் அமைத்தல், திருக்கோயிலுக்குச் சொந்தமான காலி நிலத்திற்கு முள் கம்பிவேலி அமைத்தல், மலைக்குச் செல்லும் தார்ச்சாலையை சீரமைத்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தார்கள்.

இதனை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, 2023 2024 ஆம் ஆண்டிற்கான அறிவிப்பில் தார்சாலை அமைக்க ரூ.6.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விரைவில் டெண்டர் கோரப்பட்டு பணிகள் தொடங்கப்படும். மேலும், பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்திடும் வகையில் ரூ.12.60 கோடி மதிப்பீட்டில் 24 பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு பக்தர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

**ரூ.300 கோடியில் திருப்பணிகள்!**

தமிழ்க் கடவுள் என்று போற்றப்படும் முருகப் பெருமான் வீற்றிருக்கும் முக்கிய திருக்கோயில்களை அறுபடை வீடுகள் என்று கூறுவார்கள். அவற்றில் ஒன்றான திருச்செந்தூர் திருக்கோயிலில் ஒருங்கிணைந்த பெருந்திட்டத்தின் கீழ் ரூ.300 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே போல் பல ஆண்டுகள் நிலுவையிலிருந்த பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் திருப்பணிகள் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் நிறைவுற்று குடமுழுக்கு நடத்தப்பட்டது. சுவாமிமலை திருக்கோயிலுக்கு ரூ. 6 கோடி மதிப்பீட்டில் மின் தூக்கி உள்ளிட்ட மேம்பாட்டு பணிகளும், திருத்தணி திருக்கோயிலுக்கு ரூ.80 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகளும், மாற்று மலைப் பாதை அமைக்கும் பணிகளும், திருப்பரங்குன்றம் திருக்கோயிலுக்கு ரோப்கார் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆராயப்பட்டு அதனை அமைப்பதற்கான பணிகளும் என அறுபடை வீடுகளான முருகன் திருக்கோயில்களில் ரூ. 599.50 கோடி மதிப்பீட்டில் 238 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ரூ.731.50 கோடியில் 411 பணிகள்!**

குன்றத்தூர், வடபழனி, சிறுவாபுரி ஆகிய முருகன் திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. ரூ.37.67 கோடி மதிப்பீட்டில் மருதமலை திருக்கோயில், ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் வயலூர் திருக்கோயில், ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் திருப்போரூர் திருக்கோயில், ரூ.73 லட்சம் மதிப்பீட்டில் வல்லக்கோட்டை திருக்கோயில் என அறுபடை வீடு அல்லாத 10 முருகன் திருக்கோயில்களில் ரூ.132 கோடி மதிப்பீட்டில் 173 பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒட்டுமொத்தமாக முருகன் திருக்கோயில்களில் ரூ.731.50 கோடி மதிப்பீட்டில் 411 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவையெல்லாம் இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் இல்லாத அளவிற்கு மிகப்பெரும் நிதியில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதனை எடுத்துக்கூறும் வகையில் அமைந்துள்ளன.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தி.மு.க. ஆட்சியைப் பொறுத்தளவில் எல்லோருக்கும் எல்லாம் என்பது தான் தாரக மந்திரமாகும். அந்தந்த மதத்தினர் விரும்புகின்ற வழிபாடுகளை அந்தந்த மதத்தினர் சுதந்திரமாகவும் பாதுகாப்போடும் மேற்கொள்ள வேண்டும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையோடு செயல்படுகின்ற அரசு இந்த அரசு. தவறு எங்கு நடந்தாலும் எந்த மதத்தைச் சார்ந்தவர்கள் இன்னொரு மதத்தை அவதூறு கற்பித்து பேசினாலும் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது. அந்த வகையில் சென்னிமலையை எங்களுக்குச் சொந்தமாக ஆக்குவோம் என்று கூறிய ஒரு மதத்தினர் மீது கொலை மிரட்டல் மற்றும் மதக் கலவரங்களைத் தூண்டுதல் போன்ற கடுமையான பிரிவுகளின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, சென்னையில் சரவணன் என்பவரைக் கைது செய்திருக்கிறோம். சம்பந்தப்பட்ட மற்றவர்களும் கைது செய்யப்படுவார்கள்.

ஆகவே இந்த மதம் அந்த மதம் என்று பிரித்துப் பார்க்கின்ற சக்திகள் தமிழகத்தில் தலைதூக்குவதை முதலமைச்சர் அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். தவறு யார் செய்திருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவோம். வருகின்ற அக்டோபர் 20 ஆம் தேதி வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெறவுள்ளது. எல்லா வகையிலும் ஒரு அமைதியான சூழ்நிலையை உருவாக்க, அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்ற நிலையில் பிரித்தாளுகின்ற இந்தச் சூழலை களைவதற்கு முதலமைச்சர் அவர்கள் தீவிர நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்.

**5816 ஏக்கர் நிலங்கள் மீட்பு!**

திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துகளை பாதுகாத்திடும் வகையில் இந்த அரசு பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதுவரை ரூ.5,368 கோடி மதிப்பிலான 5,816 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. திருக்கோயில்களின் 1,54,000 ஏக்கர் நிலங்கள் நவீன கருவிகள் மூலம் அளவீடு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. தவறுதலாக கணினி சிட்டாக்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட பட்டா இனங்களில் 3,079 ஏக்கர் உரிய முறையிலே கள் மூலம் திருக்கோயில் பெயரில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்தும் சொத்துக்களை மீட்கின்ற நடவடிக்கை தொடரும். முன்பெல்லாம் ஆக்கிரமிப்பு தொடர்பாக துறை அலுவலர்கள்தான் புகார் அளிக்க வேண்டுமென்ற நிலையிருந்தது. முதலமைச்சர் அவர்கள் அறிவுரையின்படி, ஆக்கிரமிப்பு தொடர்பாக யார் வேண்டுமானாலும் புகார் அளிக்கலாம் என சட்டத் திருத்தம் கொண்டு வந்துள்ளோம். ஆகவே, பொதுமக்களும், இறையன்பர்களும் ஆக்கிரமிப்பு தொடர்பாக புகார் அளிக்கலாம். இதுவரை துறையின் மூலம் நூற்றுக்கும் மேற்பட்டோர் மீது புகார் அளித்திருக்கின்றோம். அதன் தொடர்நடவடிக்கையை துறையின் சட்டப்பிரிவு கண்காணித்து வருகிறது.

திருக்கோயில்களில் பூஜைப் பொருட்கள் மற்றும் பிரசாதங்கள் தவிர்த்து மற்ற எதுவும் விற்கப்படுவதில்லை. பூஜைப் 3பொருட்களில் அவற்றின் தயாரிப்பு மற்றும் காலாவதியாகும் தேதிகள் குறிப்பிடப்பட்டிருக்கும். அப்படி குறிப்பிடப்படாமல் இருந்தால் அவற்றைக் குறிப்பிடு வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். திருக்கோயில் கடைகளை ஏலமிடுவதற்கு இணை ஆணையர் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**பொன்மாணிக்கவேலின் சித்து விளையாட்டுகள்!**

பொன்மாணிக்கவேல்மீது பலதரப்பட்ட புகார்கள் இருக்கின்றன. கடந்த காலங்களில் வீட்டிலே அனுமதி பெற்று வைத்திருந்த சிலைகளைக் கூட கடத்தப்பட்ட சிலைகள் என அதன் உரிமையாளர்களைக் கைது செய்து தன்னுடைய பெயர் மீடியாவில் போக்கஸ் ஆக வேண்டும் என்பதற்காக பல்வேறு சித்து விளையாட்டுகளை நடத்தியுள்ளார். அவர் காலத்தில் மீட்கப்பட்ட சிலைகளை விட இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இதுவரையில் வெளிநாட்டிலே இருக்கின்ற சிலைகள் 36 சிலைகள் அடையாளம் காணப்பட்டு இருக்கின்றன. 185க்கும் மேற்பட்ட சிலைகள் கடத்தல்காரர்களிடமிருந்து மீட்கப்பட்டிருக்கின்றன.

எங்கு சிலை திருட்டு நடந்தாலும் அதை மீட்பது ஒருபுறம் என்றாலும், சிலை திருட்டு நடக்கக் கூடாது என்பதற்காக 1,380 திருக்கோயில்களில் உலோக திருமேனி பாதுகாப்பு அறைகளை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இதுவரை 245 பாதுகாப்பு அறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற நடவடிக்கை கடந்த காலங்களில் ஏற்படுத்தப்படவில்லை. இதை நான் சவாலாகவே கூறுகிறேன். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் உலோகத் திருமேனிகள் இருக்கின்ற அறைகளுக்கு அந்தந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மூலம் போதிய காவலர்களை பெற்று பாதுகாத்து பராமரித்து வருகின்றோம். ஆகவே, பொன் மாணிக்கவேல் போன்றவர்களின் எல்லாம் சித்து விளையாட்டுக்கெல்லாம் இந்த அரசு செவி சாய்க்க வேண்டிய அவசியம் இல்லை. எங்களுடைய பயணம் நேர் வழியில், நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையோடும் இருக்கின்றது. சனாதனம் குறித்து பேசியது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதனால் அதன் உள்ளே செல்ல விரும்பவில்லை.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.



திருவள்ளூர் அடுத்த ஐ.சி.எம்.ஆர். திடலில் கழக தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) மண்டல மாநாடு பயிற்சி பாசறை கூட்டத்திற்கான முன் ஏற்பாடு பணிகளை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்,சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், மாநில விவசாய அணி துணை செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், மாவட்ட துணைச் செயலாளர் டாக்டர் வி.சி.ஆர்.குமரன், நகர செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர் எஸ்.மகாலிங்கம், முன்னாள் நகர மன்ற தலைவர் பொன்.பாண்டியன், நிர்வாகிகள் டி. மோதிலால், ஆர்.திலீபன், வி.எஸ்.நேதாஜி, எஸ்.கமலக்கண்ணன், கு.பிரபாகரன், டி.என்.ஆர்.சீனிவாசன், காஞ்சி சரவணன், ஆனந்த்,கொப்பூர் தீலிப், கௌதம், என்.கேசவன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்..

### புதுக்கோட்டை மாவட்டத்தில்

# பயனாளிகளுக்கு சுழற்சி நிதி - கடனுதவி தொகைக்கான காசோலை!

## அமைச்சர்.சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்!

புதுக்கோட்டை, அக்.20-

புதுக்கோட்டை ஏ.என்.எஸ். பிரைடு ஹோட்டல் கூட்டரங்கில், வனத்துறையின் சார்பில், புதுக்கோட்டை மாவட்டத்தில் காலநிலை மாற்றம் குறித்த மாவட்ட அளவிலான விழிப்புணர்வு பயிலரங்கத்தினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா. மெர்சி ரம்யா தலைமையில் 18.10.2023 அன்று துவக்கி வைத்து பயனாளிகளுக்கு சுழற்சி நிதி கடனுதவித் தொகைக்கான காசோலைகளையும் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொருட்டு சிறப்பாக பங்களித்தவர்களுக்கு நிதியுதவித் தொகைக்கான காசோலைகளையும், பசுமை சாம்பியன் விருதுகளையும் வழங்கி, மீண்டும் மஞ்சள்பை திட்டத்தினையும் துவக்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் , தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பில், புதுக்கோட்டை மாவட்டத்தில், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொருட்டு, சிறப்பாக பங்களிப்பு செய்ததற்காக 2 நபர்களுக்கு, தலா ரூ.1 இலட்சத்திற்கு “பசுமை சாம்பியன் விருதிற்கான” நிதியுதவித் தொகை காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை, வழங்கினார். மேலும் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியம் சார்பில், பிளாஸ்டிக் பயன்பாட்டை ஒழிக்கும் வகையில் “மீண்டும் மஞ்சள்பை திட்டத்தினை” துவக்கி வைத்தார்.

மேலும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் வனத்துறையின் சார்பில், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், தத்தெடுக்கப்பட்ட கிராமமான அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், சத்திய மங்களம் ஊராட்சிக்குட்பட்ட நார்த்தாமலை காப்புக்காட்டிற்கு அருகில் உள்ள சேந்தாம்பட்டி கிராமத்தில் உள்ள 20 கிராம வனக்குழு உறுப்பினர்களுக்கு தலா ரூ.10,000 வீதம் ரூ.2,00,000 சுழற்சி நிதிக் கடனுதவித் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில், தமிழ்நாடு காலநிலை மாற்றத்தின் தலைமை இயக்குநர் தீபக் எஸ் பில்கீ , உலக வள நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர்.நம்பி அப்பாதுரை, சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (காவேரிவைகை குண்டாறு) ஆர்.ரம்யா தேவி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் நா.கவிதப்பிரியா, OMCAR Foundation திரு.பாலாஜி , மருத்துவர் சரவணன், வெற்றிச்செல்வன் (பூவுலகின் நண்பர்கள்), Climate Studio Project Associate அகமது இப்ராஹிம் நிர்மல் ராகவன் (மெகா பவுண்டேசன்), தமிழ்நாடு பசுமை காலநிலை மாற்ற நிறுவனம் டாக்டர்.பிரசன்ன வெங்கடேஷ், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் அருண்பாண்டியன், மாவட்ட வன அலுவலர் கணேசலிங்கம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் கே.செல்வக்குமார், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த. சந்திரசேகர், ஒருங்கிணைப்பாளர் செல்வி.அபிராமி, க.நைனா முகம்மது, எம். எம்.பாலு, கே.வி.சுப்பையா, வனச்சரக அலுவலர்கள், வனவர்கள், தமிழ்நாடு காடுவளர்ப்பு திட்ட வனக்குழு தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், பசுமை தோழர், முதலமைச்சரின் பசுமை புத்தாய்வு திட்ட அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### நத்தக்காடையூர் ஊராட்சி வேட்டைக்காரன் புதூரில்

# சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், அக்.20-

திருப்பூர் தெற்கு மாவட்டம், காங்கயம் ஒன்றியம், நத்தக்காடையூர் ஊராட்சி வேட்டைக்காரன் புதூரில் கால்நடை பராமரிப்பு துறையின் சார்பில் நடைபெற்ற சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் துவக்கி வைத்து 3 விவசாயிகளுக்கு சிறந்த கன்று வளர்ப்புக்கான பரிசுகளையும், 3 விவசாயிகளுக்கு சிறந்த மேலாண்மைக்கான விருது மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

அமைச்சர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். நத்தக்காடையூர் ஊராட்சி வேட்டைக்காரன் புதூரில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு தேவையான சிகிச்சையும் அது சம்பந்தமாக ஏற்படக் கூடிய நோய்களையும் எவ்வாறு தடுக்க வேண்டும் என்ற விழிப்புணர்ச்சியை கால்நடை வளர்ப்பு இடத்தில் விவசாயிகளுக்கு ஏற்படுத்துவதற்காக முகாம்கள் நடைபெற்று வருகிறது. இந்த முகாமை காங்கயம் சட்டமன்ற தொகுதி யில் நடத்துவதற்கு அனுமதி அளித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கால்நடைகளுக்குத் தேவையான அளவுக்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டாலும், புதிதாக நோய்களும் உருவாக்கி வருகிறது. அதனை தடுக்கும் வகையில் முகாம்கள் நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டு மக்கள் பாரம்பரியமாக கால்நடை வளர்த்து வருகிறார்கள். கால்நடை வளர்ப்பது மூலமாக இயற்கையான உரம் மற்றும் பால் போன்றவையும் கிடைக்கிறது.

குறிப்பாக, மனிதர்களுக்கு உடல்நலம் சரி இல்லாமல் இருந்தால் வாகனங்கள் மூலமாக மருத்துவமனைக்கு எளிதாகச் சென்றுவிடலாம். ஆனால் கால்நடைகளை அழைத்துச் செல்வதற்கு சிரமம் ஏற்படும். எனவே இது போன்ற முகாம்களையும், ஆங்காங்கே உள்ள துணை சுகாதார நிலையங்களில், கால்நடை மருந்தகங்களையும் பயன்படுத்தி கொள்ள வேண்டும். 20 ஆண்டுகாலம் காத்திருந்த 1 லட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 50 ஆயிரம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு வங்கி கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு மீண்டும் விவசாயிகள் புதிதாக விவசாயம் செய்வதற்கான கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் பயன்படுத்தி கொண்டு விவசாயத்தையும், கால்நடைகளையும் பாதுகாத்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ.லட்சுமணன், மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத் துறை) திருக்குமரன், காங்கயம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் மகேஷ்குமார், மருதுறை ஊராட்சி முன்னாள் தலைவர் சிவக்குமார், கவுன்சிலர் ரவி உள்பட பலர் கலந்து கொண்டனர்.


தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை,**

**சென்னை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.40/2023–2024/தவஅ/நாள் 16.10.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, சென்னை வட்டம் அவர்களால், காஞ்சிபுரம் (நெ) க(ம)ப கோட்டத்தைச் சார்ந்த (i) சி.ஆர்.ஐ.டி.பி. 2023–24 (1 பணி – மறு அழைப்பு) (ம) (ii) காஞ்சிபுரம் (நெ) க(ம)ப கோட்டத்தைச் சார்ந்த சி.எம்.டி.எ வைப்பு நிதி பணி 2023–24 (1 பணி – மறுஅழைப்பு) **இணையவழியில் மட்டுமே** சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **06.11.2023** பிற்பகல் 12.30 மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **20.10.2023** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ),
க(ம)ப சென்னை வட்டம்.

செ.ம.தொ.இ./5632/ஒப்பந்தப்புள்ளி/2023




நாமக்கல் மேற்கு மாவட்டம், திருச்செங்கோடு முன்னாள் நகர கழக செயலாளரும், தலைமைக் கழக பேச்சாளருமான முரசொலி முத்து அவர்கள், உடல் நலக் குறைவு காரணமாக, சேலம் தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் ஆகியோர் மருத்துவமனைக்கு நேரில் சென்று உடல் நிலை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்து, குடும்பத்தாரிடம் நலம் விசாரித்து ஆறுதல் கூறி, நிதி உதவி வழங்கினர். உடன் நகரக் கழகச் செயலாளர் கார்த்திகேயன், மாவட்ட துணைச் செயலாளர் மயில்சாமி, அயலக அணி அமைப்பாளர் சாதிக், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மல்லை ஜெகதீஷ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.


**கோயம்புத்தூர் மாநகராட்சி**

பொறியியல் பிரிவு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். (e) 72/2023 நாள்:17.10.2023

| வ.எண் | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 22,24,28, 48,52,53,54,56,57 58,61,67,68, 96க்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 28 பணி | 14.11.2023 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 15.11.2023 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகம், பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் –1, தொலைபேசி எண். 0422 2396026.

Email: commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

செ.ம.தொ.இ. 563/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 19.10.2023





புதுக்கோட்டை ஏ.என்.எஸ். பிரைடு ஹோட்டல் கூட்டரங்கில், வனத்துறையின் சார்பில், காலநிலை மாற்றம் குறித்த மாவட்ட அளவிலான விழிப்புணர்வு பயிலரங்கத்தினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் நேற்று முன்தினம் (18.10.2023) குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். உடன் தமிழ்நாடு காலநிலை மாற்றத்தின் தலைமை இயக்குநர் தீபக் எஸ் பில்கீ, உலக வள நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர். நம்பி அப்பாதுரை மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம், காங்கேயம் தெற்கு ஒன்றியம், சிவன்மலை ஊராட்சி ஸ்ரீ அண்ணாமலை செட்டியார் திருமண மண்டபத்தில் கலைஞர் மக்கள் சேவை முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (18.10.2023) ஈரோடு மாவட்டம், சென்னிமலை, சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா, சட்டமன்ற உறுப்பினர் ஆர்.ஈஸ்வரன், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஜி.ஜவகர், மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் எல்லப்பாளையம் சிவக்குமார், மண்டல இணை ஆணையர் ஏ.டி.பரஞ்சோதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு கலைஞர் மக்கள் சேவை முகாமை துவக்கி வைத்து

# 749 பயனாளிகளுக்கு ரூ.2.55 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினார்!

திருப்பூர், அக். 20 - முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு கலைஞர் மக்கள் சேவை முகாமை துவக்கி வைத்து, 749 பயனாளிகளுக்கு ரூ.2.55 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர்.

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம், காங்கேயம் தெற்கு ஒன்றியம், சிவன்மலை ஊராட்சி ஸ்ரீ அண்ணாமலை செட்டியார் திருமண மண்டபத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் கலைஞர் மக்கள் சேவை முகாமினை துவக்கி வைத்து வருவாய்த் துறையின் சார்பில் 244 பயனாளிகளுக்கு ரூ.4.46 இலட்சம் மதிப்பீட்டிலும், கூட்டுறவுத் துறையின் சார்பில் 17 பயனாளிகளுக்கு ரூ.15.03 இலட்சம் மதிப்பீட்டிலும், வேளாண்மைத் துறையின் சார்பில் 24 பயனாளிகளுக்கு ரூ.1.44 இலட்சம் மதிப்பீட்டிலும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 05 பயனாளிகளுக்கு ரூ.0.90 இலட்சம் மதிப்பீட்டிலும், மகளிர் திட்டம் சார்பில் 19 பயனாளிகளுக்கு ரூ.84.30 இலட்சம் மதிப்பீட்டிலும், 425 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்ட அட்டைகளையும், 10 பயனாளிகளுக்கு அமைப்பு சாரா தொழிலாளர் நலவாரிய அட்டைகளையும், முன்னோடி வங்கி சார்பில் 1 பயனாளிக்கு ரூ.1.44 கோடி மதிப்பீட்டில் வேளாண்மை கடனுதவியையும், தாட்கோ சார்பில் 4 பயனாளிகளிக்கு ரூ.6.40 இலட்சம் மதிப்பீட்டில் ஆவின் பாலகம் அமைப்பதற்கான கடனுதவி என மொத்தம் 749 பயனாளிகளுக்கு ரூ.2.55 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது : இன்றைய தினம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கலைஞர் மக்கள் சேவை முகாமை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த முகாமில் பொதுமக்களை நேரில் சந்தித்து மனுக்களைப் பெற்று முடிந்த வரை இங்கேயே அதற்கான தீர்வுகள் காணப்படும். குறிப்பாக முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்திற்கான அடையாள அட்டைகள், அமைப்பு சாரா தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கான விண்ணப்பங்கள், கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் விடுபட்டு போன நபர்கள் அளிக்கும் விண்ணப்பங்கள், பட்டா மாறுதல், முதியோர் உதவித் தொகைக்கான விண்ணப்பம் என பல்வேறு விதமான விண்ணப்பங்களை மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அனைத்துறை அரசு அலுவலர்கள் சிவன்மலையில் முகாமிட்டு தீர்வு காணப்பட்டு வருகிறது. இந்த முகாமில் ஏற்படக்கூடிய அனுபவங்களை வைத்து இதே போன்று மற்ற பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்கு இது ஒரு சோதனை ஓட்ட நிகழ்வாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மக்களுடைய ஆர்வத்திற்கு தடை ஏற்படாமல் அவர்களது எண்ணங்கள் மற்றும் விருப்பத்தை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் இன்று மாலை 4 மணி வரை இந்த முகாம் நடைபெறும். அதே நேரத்தில் முடிந்தளவு விண்ணப்பங்களை கொண்டு வந்திருக்கிற பொதுமக்களுக்கு அந்தந்த துறை சார்ந்த அலுவலர்கள் உரிய முறையில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என வரவேற்கும் கேட்டுக்கொள்கிறேன். இது வரை 300க்கும் மேற்பட்ட பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதன் மூலமாக ஒவ்வொரு பிரச்சனைக்கும் சமந்தப்பட்ட அலுவலகங்களுக்கு செல்ல வேண்டிய அவசியமில்லை என்ற சூழ்நிலையை இந்த முகாம் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுடைய சிரமங்களை தவிர்ப்பதற்காக இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சிவன்மலை ஊராட்சியில் வசிக்கக்கூடிய பொதுமக்கள் இம்முகாமினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற முகாம்கள் மீண்டும் மாவட்டத்தில் விரிவாக்கம் செய்யப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் படியூர் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும் என்ற கோரிக்கை வைத்தோம். உடனடியாக அதற்கு தீர்வு காணப்பட்டு, இந்த இடத்திலேயே மருத்துவம் பெறக்கூடிய வகையில் ஆரம்ப சுகாதார மையம் அமையவுள்ளது. அதனை தொடர்ந்து, சிவன்மலை ஊராட்சியில் விளையாட்டு மைதானம் மற்றும் உள்விளையாட்டு அரங்கம் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் 6 ஏக்கர் இடம் தேர்வு செய்யப்பட்டது. குடிநீர் மேல்நிலை தொட்டிகள், சாலை வசதிகள் போன்ற எண்ணற்ற பணிகள் அரசின் சாரபில் செய்யப்பட்டு வருகிறது. இதுபோன்ற பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் திட்டங்களை செயல்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே உங்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன் என்று அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் சிவன்மலை ஸ்ரீ அண்ணாமலை செட்டியார் திருமண மண்டபத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கலைஞர் மக்கள் சேவை முகாமை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நல்ல நிர்வாகத்தை கொண்டு சிறப்பான ஆட்சியை வழங்கி வருகிறார்கள். ஒரே இடத்தில் அனைத்து விண்ணப்பங்களுக்கும் தீர்வு வழங்கப்படும் வகையில் இதுபோன்ற முகாம்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது. ஒவ்வொரு அலுவலகமாக பொதுமக்கள் அலைய வேண்டியது இல்லை. மக்களின் பிரச்சனை எதுவாக இருந்தாலும் உரிய வகையில் முகாமில் தீர்வுகளை கொடுக்கப்படும். பொதுமக்கள் அவர்களுடைய கோரிக்கைகள் சொல்வதற்கும் தீர்வு கிடைப்பதற்கு ஒரு வாய்ப்பாக இம்முகாம்களை பயன்படுத்திக் கொள்ளவேண்டும். சிவன்மலை ஊராட்சியில் வசிக்கக்கூடிய மக்கள் இந்த நல்ல வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் அரசன், இணை இயக்குநர் (வேளாண்மை) மாரியப்பன், இணைப்பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) சினீவாசன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மதுமிதா, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) செல்வி, மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் புஷ்பாதேவி, மாவட்ட மேலாளர் (தாட்கோ) ரஞ்சித்குமார், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) வரலட்சுமி, முன்னோடி வங்கி மேலாளர் ரவி, காங்கேயம் வருவாய் வட்டாட்சியர் மயில்சாமி, காங்கேயம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஹரிகரன், விமலாதேவி, ஒன்றிய கழக செயலாளர்கள் தாராபுரம் ஒன்றியக் குழு பெருந்தலைவர் எஸ்.வி.செந்தில்குமார், குண்டடம் ஒன்றிய கவுன்சிலர் சு.சந்திரசேகர், சிவ.செந்தில்குமார், மாவட்ட கவுன்சிலர் எஸ்.ஆர்.எஸ்.செல்வம், கே.கே.சிவானந்தன், நகர கழக செயலாளர்கள் வசந்தம் நா.சேமலை யப்பன், சபரி எஸ்.முருகானந்தம், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் பாலசுப்பிரமணியம், சண்முக சுந்தரம் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் தணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தலைமைக் கழக அறிவிப்பு

தூத்துக்குடி தெற்கு மாவட்டம், திருவைகுண்டம் மேற்கு ஒன்றியம், திருவைகுண்டம், தெற்கு யாதவர் தெருவைச் சேர்ந்த 7வது வார்டு பூத் கமிட்டி உறுப்பினர் ச.முத்துக்கிருஷ்ணன் அவர்கள் குடும்பச் சூழ்நிலை காரணமாக தனது பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொள்வதாகத் தெரிவித்ததன் காரணமாக, அவர் அப்பொறுப்பிலிருந்தும்;

திருவைகுண்டம் பேரூருக்குட்பட்ட ஒன்றிய பிரதிநிதி நாராயணபுரம் சு.பாலகிருஷ்ணன் அவர்கள் குடும்பச் சூழ்நிலை காரணமாக தனது பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொள்வதாகத் தெரிவித்ததன் காரணமாக, அவர் திருவைகுண்டம் மேற்கு ஒன்றிய பிரதிநிதி பொறுப்பிலிருந்தும்;

உடன்குடி கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர் எம்.மகாராஜன் அவர்கள் குடும்ப சூழ்நிலை காரணமாக தனது பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொள்வதாக தெரிவித்ததன் காரணமாக, அவர் ஒன்றிய துணைச் செயலாளர் பொறுப்பிலிருந்தும் விடுவிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 18.10.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகுக் குழாம்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (18.10.2023) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர். க.மணிவாசன், முதன்மை செயலாளர்/ சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் / மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஐ.நா.அமைப்பின் மதிப்புமிகு முதலீட்டு விருது பெற்றுள்ள

# தமிழ்நாடு அரசின் தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கு பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, அக். 20- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சார் முதலீடுகளை அதிகரிப்பதில் ஆற்றிய சிறப்பான பணிகளுக்காக ஐ.நா.அமைப்பின் மதிப்புமிகு முதலீட்டு ஊக்குவிப்பு விருது 2023ஐ பெற்றுள்ள தமிழ்நாடு அரசின் தொழில் வழிகாட்டி நிறுவனத்தை பாராட்டுவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

புதுப்பித்தக்க ஆற்றல் சார் முதலீடுகளை அதிகரிப்பதில் ஆற்றிய சிறப்பான பணிகளுக்காக ஐ.நா. அமைப்பின் மதிப்புமிகு 'முதலீட்டு ஊக்குவிப்பு விருது2023'ஐப் பெற்றுள்ள தமிழ்நாடு அரசின் தொழில் வழிகாட்டி (Guidance TN) நிறுவனத்திற்கு என் பாராட்டுகள்.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் புதுமையான அணுகுமுறைகளும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளில் கொண்டுள்ள அர்ப்பணிப்பும் உண்மையிலேயே குறிப்பிடத்தக்கவை. அவை பசுமையான எதிர்காலத்துக்கான நமது திராவிட மாடல் அரசின் உறுதியான ஈடுபாட்டைப் பறைசாற்றுவதாக அமைந்திருக்கின்றன.

இந்தப் பெருமைமிகு மைல்கல்லை அடைந்ததற்காக தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவன மேலாண் இயக்குநர் விஷ்ணு ஐ.ஏ.எஸ் மற்றும் கடுமையாக உழைத்து வரும் அனைத்து உயர் அலுவலர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த பாராட்டுகள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி

# தி.மு.க. சட்டத்துறை சார்பில் 4வது மண்டல பேச்சுப் போட்டி!

## மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிக்கை!

சென்னை, அக். 20- தி.மு.க. சட்டத் துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

"தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினையொட்டி தி.மு.க. சட்டத்துறையின் சார்பில், சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் மூன்று ஆண்டுகளுக்குட்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சுப் போட்டிகளை கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நடத்திட திட்டமிடப்பட்டு ள்ளது. போட்டிகள் தமிழில் மட்டுமே நடத்தப்படும்.

போட்டிகளுக்கான தலைப்புகள் பின்வருமாறு:

1. கலைஞரின் பார்வையில் சமூக நீதி - மாணவர்கள்
2. கலைஞரின் பார்வையில் மாநில சுயாட்சி - இளம் வழக்கறிஞர்கள்

மேற்சொன்ன இந்த தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பினை போட்டி துவங்குவதற்கு முப்பது நிமிடங்களுக்கு முன்பு போட்டி நடத்தும் நடுவர்கள் அறிவிப்பார்கள்.

அந்த தலைப்பினை ஒட்டியே போட்டியாளர்கள் ஐந்து நிமிடங்களுக்கு மிகாமல் தமிழில் பேசிடவேண்டும்.

மாநிலம் முழுதும் உள்ள சட்ட கல்லூரிகளை ஆறு மண்டலங்களாக பிரித்து, ஒவ்வொரு மண்டலத்தில் நடைபெறும் தேதி, இடம் ஆகியவை ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. அதில் முதல் மண்டல பேச்சுப் போட்டி நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து தற்போது 4வது மண்டலப் பேச்சு போட்டி கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரத்தின்படி நடைபெறும்.

போட்டிகளுக்கான பரிசு விவரம். ஒவ்வொரு மண்டலத்திலும்

முதல் பரிசு - ரூபாய் 50,000/- தங்கப் பதக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு - ரூபாய் 25,000/- வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு - ரூபாய் 15,000/- தாமிரப் பதக்கம், சான்றிதழ், இரண்டு ஆறுதல் பரிசுகள் - ரூபாய் 5,000/- வெண்கலப்பதக்கம், சான்றிதழ். வழங்கப்படும்.

இவ்வாறு ஒவ்வொரு மண்டலத்திலும் நடைபெறும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று பரிசு பெற்றவர்களுக்கான (சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் இளம் வழக்கறிஞர்கள்) "மாநில அளவிலான இறுதிப் போட்டி" வருகிற 6.12.2023 (புதன்கிழமை) அன்று நீலாங்கரை, "ஆர்.கே.கன்வென்ஷன் சென்டரில்" நடைபெறும்.

மாநிலத்தில் உள்ள சட்டக் கல்லூரி முதல்வர்கள் தங்கள் கல்லூரியிலிருந்து பங்கு பெற விரும்பும் மாணவர்களின் பட்டியலினை, தங்கள் மண்டலத்தின் போட்டி நடைபெறும் நாளுக்கு முன்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள "பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்களிடம்" ஒப்படைக்க வேண்டுகிறோம். தவிர்க்க முடியாத காரணங்களால் பெயர் அளிக்க முடியாத மாணவர்கள் போட்டி நடக்கும் இடத்தில் நேரடியாக உரிய அடையாள அட்டை அல்லது கல்லூரி முதல்வரின் அனுமதி கடிதத்துடன் கலந்து கொள்ளலாம்.

இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு

முதல் பரிசு - ரூபாய் 1,00,000/- தங்கபதக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு - ரூபாய் 50,000/- வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு - ரூபாய் 30,000/- தாமிரப் பதக்கம், சான்றிதழ், இரண்டு ஆறுதல் பரிசு - ரூபாய் 10,000/= வெண்கலப்பதக்கம்,சான்றிதழ்.

பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்

கே.எஸ்.இரவிச்சந்திரன் சட்டத்துறை இணைச் செயலாளர் 98400-22250

ஜெ.பச்சையப்பன் சட்டத் துறை துணைச் செயலாளர் 98402-60178

கே.சந்துரு சட்டத் துறை துணைச் செயலாளர் 94440-06999

கே.ஜே.சரவணன் தலைமைக் கழக வழக்கறிஞர் 98410-57345

4வது மண்டல பேச்சுப் போட்டி

போட்டி நடைபெறும் தேதி, இடம் ஆகிய விவரங்கள்

போட்டியின் நடுவர்கள் - தலைமைக் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான்,

வழக்கறிஞர் நன்மாறன்

21.10.2023 - (மாணவர்கள்) - 1. அரசு சட்டக் கல்லூரி, மதுரை (இடம்), 2. அரசு சட்டக் கல்லூரி, காரைக்குடி, 3. அரசு சட்டக் கல்லூரி, இராமநாதபுரம், 4. அரசு சட்டக் கல்லூரி, தேனி, 5. பிரிஸ்ட் பல்கலைக்கழக வளாகம், அரசனூர், சிவகங்கை, 6. ஜி.டி.என். சட்டக் கல்லூரி, திண்டுக்கல் (தனியார்).

22.10.2023 - (வழக்கறிஞர்கள்) - குறிஞ்சி மகால், யாதவா பெண்கள் கல்லூரி அருகில், திருப்பாலை, மதுரை.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில்

# சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் வேலூரில் கருத்தரங்கம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் - இரா.சபாபதி மோகன் - ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்புரை!

வேலூர், அக். 20 - "தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் வேலூரில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாபெரும் கருத்தரங்கம்" வேலூரில் நடைபெற்றது.

"சிறுபான்மையின மக்களின் உரிமைகளை காத்திட அவர்களின் உற்ற சகோதரராய் விளங்கும் சிறுபான்மையினர் மக்களின் பாதுகாவலர் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் சார்பாக நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் கருத்தரங்கம், 15.10.2023 ஞாயிறு அன்று வேலூர் தண்டபாணி திருமண மண்டபத்தில் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் தலைமையில் நடைபெற்றது. சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு துணைச் செயலாளர் நூர்ஜஹான் வரவேற்புரை ஆற்றிய இந்நிகழ்வில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், கழக கொள்கை பரப்புச் செயலாளர் முனைவர் இரா.தி.சபாபதி மோகன், வேலூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ, வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ப. கார்த்திகேயன் எம்.எல்.ஏ ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

சிறுபான்மையின மக்களின் உரிமைகளைக் காத்திட அன்றும், இன்றும் குரல் கொடுக்கும் ஒரே இயக்கம் தி.மு.க, முத்தமிழறிஞர் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றக் காலத்தில் எல்லாம் சிறுபான்மையின மக்களின் குரலுக்கு செவிமடுத்து அவர்களின் குறைகளை களைய எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தியவர். அவர் வழியில் இன்றைக்கு சிறுபான்மையின மக்களின் உரிமைகளை காத்திட நாளும் உழைக்கும் முதலமைச்சர்; கழகத் தலைவர் அவர்களுக்கு இக்கூட்டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு மாநில சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு துணைச் செயலாளர்கள் அன்வர்கான், முனவர் ஜான், விஜய குமார், ஷேக் அப்துல்லா, அடையாறு ஷபீல், ஜோசப் ராஜ், ரஃபி அகமது, நாகை மு.ஷாகுல் அமீது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், வேலூர் மத்திய மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மண்டலம் 3,4 க்கு உட்பட்ட கழக மாவட்டங்களின் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் மாவட்ட, மாநகர நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நிறைவாக, வேலூர் மத்திய மாவட்ட அமைப்பாளர் எஸ்.தௌபிக் அகமது நன்றி கூறினார்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்ட

# ஒன்றிய - நகர - பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி அறிக்கை!



கழகத்தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் வழிகாட்டுதலின்படி, புதுக்கோட்டை தெற்கு ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில், சுற்றுச்சூழல் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், மாநில மாணவர் அணி இணைச்செயலாளர் சி.ஜெரால்ட், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் திருமதி. ஜெ.வீரமணி, புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மாணவரணி செயலாளர் ஆ.கலைச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர். அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் வருகிற 05.11.2023 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணியளவில் புதுக்கோட்டை பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள எம். ஏ. கிராண்ட் ஹோட்டலில் நடைபெற உள்ளது. இந்த நேர்காணலில் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரும் உரிய ஆவணங்களுடன் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் எஸ்.ரகுபதி**
செயலாளர்
புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி மாவட்டம், அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம், எட்டரை கிராமத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் 15.10.2023 அன்று நடைபெற்ற அரசு விழாவில் 19.76 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி டிராக்டர் மற்றும் தூய்மைப் பணி வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர், மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் எம்.பழனியாண்டி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் தேவநாதன், திட்ட இயக்குனர் மகளிர் திட்டம் ரமேஷ் குமார், உதவி இயக்குனர் ஊராட்சிகள் திருமதி.கங்காதாரிணி, மாவட்ட ஊராட்சித் தலைவர் தா.ராஜேந்திரன், அந்தநல்லூர் ஒன்றிய குழுத் தலைவர் ச.துரைராஜ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



வணிகர்கள், நிறுவனங்கள் வணிகவரி நிலுவை தொகையை செலுத்த புதிய அணுகுமுறை, கூடுதல் சலுகைகளுடன் கூடிய ‘சமாதான்’ திட்டத்தை சட்டப்பேரவையில் 110 விதியின்கீழ் அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு விழுப்புரம் மாவட்ட வணிக சங்க நிர்வாகிகள் நன்றி தெரிவித்து தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அந்த தீர்மானத்தை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடியிடம் வணிக சங்கத் தலைவர் இராமகிருஷ்ணன் தலைமையில் வழங்கி நன்றி தெரிவித்தனர். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., வணிகர் சங்க நிர்வாகிகள் செயலாளர் பிரேம்நாத், பொருளாளர் கலைமணி, துணைத் தலைவர் முபாரக் அலி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### 2023 ஏப்ரல் முதல் செப்டம்பர் மாதம் வரை 6 மாதங்களில் மட்டும்

# படகு குழாம்களில் 27,25,221 சுற்றுலா பயணிகள் படகுச் சவாரி!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் தகவல்!

சென்னை, அக் 20-

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக்கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர் க.மணிவாசன் முதன்மை செயலாளர் /சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் / மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (18.10.2023) நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், சிறப்பாக செயல்பட்ட ஓட்டல் மேலாளர்களுக்கு பரிசுத்தொகை காசோலைகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் வழங்கினார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவு விடுதிகள், சுற்றுலா பயணத்திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என பல்வேறு சுற்றுலா சேவைகளை வழங்கி வருகின்றது. முதலமைச்சர் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே சுற்றுலா பயணிகளின் விருப்பமான முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். சுற்றுலா கொள்கை 2023 வெளியிட்டு, சுற்றுலாத்துறை முதலீட்டாளர்களுக்கு பல்வேறு ஊக்கத் தொகை மற்றும் சலுகைகளை அறிவித்துள்ளார்கள்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் படகு குழாம்களை இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டர் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப்படகுகள் என மொத்தம் 588 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன.

2022 - 2023 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் படகு குழாம்கள் மூலமாக இயக்கப்படும் படகுகளில் மொத்தம் 42,22,945 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

2023 - 2024 ஆம் நிதியாண்டில் ஏப்ரல் முதல் செப்டம்பர் மாதம் வரை 6 மாதங்களில் மட்டும் மொத்தம் 27,25,221 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டுள்ளனர். (செப்டம்பர் - 2023 மாதத்தில் மட்டும் 3,07,785 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டுள்ளனர்.)

தமிழ்நாடு சுற்றுலாத்துறை மேலும் வளர்ச்சியடைய சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகள் விரைந்து முடிவடையும் வகையில் அலுவலர்கள் தங்கள் பணிகளை மேற்கொள்ள வேண்டும் இவ்வாறு அமைச்சர் கா. ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொது மேலாளர் திருமதி. இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் - அரியலூர் மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர்

# தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் - குன்னம் சி.இராஜேந்திரன் - எம்.பிரபாகரன் பங்கேற்பு!

பெரம்பலூர், அக். 20-

தி.மு.க. இளைஞர் அணிக்கு, பெரம்பலூர் - அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல், பெரம்பலூர் பாலக்கரையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள, பெரம்பலூர் நகரம், பெரம்பலூர், ஆலத்தூர் கிழக்கு, ஆலத்தூர் மேற்கு, வேப்பந்தட்டை கிழக்கு, வேப்பந்தட்டை மேற்கு, வேப்பூர் வடக்கு, வேப்பூர் தெற்கு ஆகிய ஒன்றியங்கள், குரும்பலூர், அரும்பாவூர், பூலாம்பாடி, லெப்பைக்குடிக்காடு ஆகிய பேரூர், அரியலூர் மாவட்டத்தில் உள்ள, அரியலூர் வடக்கு தெற்கு ஜெயங்கொண்டம் வடக்கு தெற்கு, திருமானூர் கிழக்கு மேற்கு, ஆண்டிமடம் வடக்கு தெற்கு, செந்துறை வடக்கு தெற்கு, தா.பழூர் கிழக்கு மேற்கு ஆகிய ஒன்றியங்கள், அரியலூர் நகரம், ஜெயங்கொண்டம் நகரம், உடையார்பாளையம் பேரூராட்சி, வரதராஜன் பேட்டை பேரூராட்சி ஆகிய பகுதிகளுக்கு நேர்காணல் நடைபெற்றது.

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன், எஸ். ஜோயல், இன்பா, ஏ.என். ரகு, நா.இளையராஜா, ப.அப்துல்மாலிக், கே.இ.பிரகாஷ், க.பிரபு, ஜி.பிரதீப் ராஜா, சி.ஆனந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு நேர்காணல் நடத்தினார்கள்.

இந்த நேர்காணலில் பெரம்பலூர் மாவட்டத்தில் 210 பேரும், அரியலூர் மாவட்டத்தில் 250 பேரும் கலந்து கொண்டனர்.

போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் மற்றும்

மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, டாக்டர் செ.வல்லபன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.அண்ணாதுரை, ஒன்றிய செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் வடக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழக இளைஞர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணல் அங்கேரிப்பாளையம், வெங்கமேடு, வி.கே.அரசு மேல்நிலைப் பள்ளி எதிரில் உள்ள ஜெகா கார்டன் முத்து கிருஷ்ணன் திருமண மண்டபத்தில் கழக இளைஞர் அணி துணை செயலாளர்கள் எஸ்.ஜோயல், எஸ்.இன்பா ஏ.என்.இரகு, நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்தகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், மாநகர அமைப்பாளர்கள் சு.முத்துக்குமார், எம்.எஸ்.ஆர்.ராஜ் (எ) மணிகண்டபிரபு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் த.சசிகுமார், ப.ரவிச்சந்திரன், செ.ராஜசேகர், மு.முகமது ஜினைத், சசிகுமார் (எ) த.ஞானசிகாமணி, ஈ.பாலசுப்பிரமணியம், உ.லிங்கேஸ்வரன், மாநகர துணை அமைப்பாளர்கள் வடக்கு ஆ.வஞ்சிமுத்து, த.சந்திரசேகர், ச.பாண்டிதுரை, அ.பார்த்திபன், நா.தியாகு, தெற்கு ம.அசோக்குமார், கா.சையது அபுதாஹிர், மு.விக்னேஷ்குமார், க. திருநாவுக்கரசு, கு.அரவிந்த், ர.தமிழரசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்! அக்டோபர் 22 - ஞாயிறு அன்று

# திருவண்ணாமலையில் - வடக்கு மண்டல வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

## கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் கடந்த 22-03- 2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு. கழக மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கழகத்தில் ஒரு கோடி புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல், முழுமையாக பூத் கமிட்டி அமைத்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. மேற்கண்ட தீர்மானங்களின்படி, கழகத்தில் மொத்தம் இரண்டு கோடி உறுப்பினர்களை வெற்றிகரமாகச் சேர்த்து, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA 2) நியமிக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் முழுமையாகச் சரிபார்க்கப் பட்டுள்ளது.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரை யின்படி சரிபார்க்கப்பட்ட வாக்குச்சாவடிப்

பொறுப்பாளர்களுக்கென “வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) ஒரு நாள் பயிற்சிப் பாசறைக் கூட்டம்” நடத்திட முடிவெடுக்கப் பட்டு, கடந்த ஜூலை 26, ஆகஸ்ட் 17 மற்றும் செப்டம்பர் 24 ஆகிய நாட்களில் திருச்சி, இராமநாதபுரம் மற்றும் காங்கேயத்தில் முறையே டெல்டா ,தென் மற்றும் மேற்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் வெற்றிகரமாக நடை பெற்று முடிந்ததைத் தொடர்ந்து, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களின் “வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்” வருகிற அக்டோபர் 22 அன்று திருவண்ணாமலை மாவட்டம் 606611, திருவண்ணாமலை ஒன்றியம், மலப்பாம்பாடி ஊராட்சியில் உள்ள அருணாச்சலம் நகரில் அமைந்துள்ள “கலைஞர் திடலில்”, முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றிட நடை பெற உள்ளது.

வடக்கு மண்டலத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள 13 கழக மாவட்டங்களின் மாவட்டக் கழகச் செயலாளர்கள், தமது மாவட்டங்களுக்குட்பட்ட ‘வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) கூட்டத்தை’ கூட்டி, இப்பயிற்சி பாசறைக் கூட்டத்தின் அவசியத்தை எடுத்துரைத்து, தங்களது மாவட்டத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பா ளர்கள் (BLA 2) அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளைச் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

1. திருவண்ணாமலை வடக்கு
2. திருவண்ணாமலை தெற்கு
3. தர்மபுரி கிழக்கு
4. தர்மபுரி மேற்கு
5. கள்ளக்குறிச்சி வடக்கு
6. கள்ளக்குறிச்சி தெற்கு
7. கிருஷ்ணகிரி கிழக்கு
8. கிருஷ்ணகிரி மேற்கு
9. திருப்பத்தூர்
10. இராணிப்பேட்டை
11. வேலூர்
12. விழுப்புரம் வடக்கு
13. விழுப்புரம் தெற்கு

“அண்ணா அறிவாலயம்”
சென்னை18.
நாள்: 16-10- 2023.

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

### வரும் 22 ம் தேதி திருவண்ணாமலையில் வடக்கு மண்டல வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள்

# பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் முதல்வர் சிறப்புரை ஆற்றுகிறார்!

## மாவட்டக் கழகத்தினருக்கு தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவண்ணாமலை, அக். 20-

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதியார் அவர்கள் தலைமையில் கடந்த 22.03.2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கழகத்தில் ஒரு கோடி புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல், முழுமையாக பூத் கமிட்டி அமைத்தல் உள்ளிட்ட தீர்மானங் கள் நிறைவேற்றப் பட்டன. மேற்கண்ட தீர்மானங்களின் படி கழகத்தில் மொத்தம் இரண்டு கோடி உறுப்பினர்களை வெற்றிகரமாகச் சேர்த்து, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச்சாவடி பொறுப்பா ளர்கள் (BLA 2) நியமிக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் முழுமையாகச் சரிபார்க்கப் பட்டுள்ளது.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி சரிபார்க்கப்பட்ட வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்களுக்கென “வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA 2) ஒரு நாள் பயிற்சிப் பாசறைக் கூட்டம்” நடத்திட முடிவெடுக்கப்பட்டு. கடந்த ஜூலை 26, ஆகஸ்ட் 17 மற்றும் செப்டம்பர் 24 ஆகிய நாட்களில் மேற்கு மண்டல வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து வடக்கு மண்டலம் கிருஷ்ண



கிரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட “வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்களுக்கு (BLA 2) பயிற்சி பாசறைக் கூட்டம்” வருகிற 22 ம் தேதி திருவண்ணாமலை ஒன்றியம், அருணாச்சலம் நகரில் அமைந்துள்ள “கலைஞர் திடலில்” கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்கள் சிறப்புரை ஆற்ற உள்ளார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகளுக்கான வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கு (BLA 2) நேரில் விவரங்கள் தெரிவித்து அனைத்து தகவல்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அதன்படி அனைத்து வாக்குச்சாவடி பொறுப்பாளர்களும் தவறாமல் 22 ம் தேதி காலை 5.00 மணிக்கு தங்கள் பயணத்தை புறப்பட திட்டமிட்டு காலை 8.00 மணிக்குள் திருவண்ணாமலை, அருணாச்சலம் நகரில் கூட்டம் நடைபெறும் “கலைஞர் திடலுக்கு” சென்றடைய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றிய, நகர, பேரூர்க் கழக செயலாளர்கள் முனைப்புடன் செயல்பட்டு அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகளுக்கான அனைத்து வாக்குச்சாவடி பொறுப்பாளர்களையும் (BLA 2) தவறாமல் அழைத்துக் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகரத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., வழிகாட்டுதலின்படி நடைபெற்ற வார்டு பாகநிலை முகவர்கள் மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.ஏ.2., பி.எல்.சி. ) பொறுப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் பேசினார். உடன் சீர்காழி தொகுதி பொறுப்பாளரும், மாநில மாணவர் அணி துணைச் செயலாளருமான மன்னை சோழராஜன், சீர்காழி நகர கழகச் செயலாளர் ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சுவாமிநாதன், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் காழிகலைவாணன், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி ராஜசேகர் ஆகியோர் உள்ளனர்.



பெரம்பலூர் மாவட்டம், அரனாரை கிராமத்தைச் சேர்ந்த பத்மஜா – அசோக்குமார் ஆகியோரின் மகள் ஜெய்ஜியோட்ஷ்னா சென்னை வேலம்மாள் பள்ளியில் 10ம் வகுப்பு படிக்கிறார். இவர் இந்திய விளையாட்டு ஆணையத்தின் முகாமில் பயிற்சி பெற்று வரும் இவர் கேலோ வீராங்கனையாக உள்ளார், இவர் அசாம் மாநிலம், கவுகாத்தியில் நடைபெற்ற தேசிய அளவிலான சைக்கிள் போட்டியில் வெண்கலப்பதக்கம் பெற்றார். இவரை ஊக்குவிக்கும் வகையில் தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ரூ.16 லட்சம் மதிப்பிலான நீண்ட தூரம் செல்லும் சைக்கிளை வழங்கியுள்ளார். அந்த சைக்கிளை மேனாள் ஒன்றிய அமைச்சர் கழக துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., யிடம் பெரம்பலூரில் காண்பித்து வாழ்த்துப் பெற்றார். மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் விழுப்புரம் நாடாளுமன்றத் தொகுதி 72 திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி வாக்குசாவடி பாக முகவர்கள் கலந்து கொண்டஆலோசனைக் கூட்டம் தொகுதி பொறுப்பாளர் சிவ..ஜெயராஜ் தலைமையில் திண்டிவனத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்சீத்தாபதி சொக்கலிங்கம், செந்தமிழ்ச்செல்வன், மாவட்ட அவைத்தலைவர்டாக்டர் சேகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### தாராபுரத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா!

# வினாடி-வினாபோட்டிகுறித்துதுண்டுப்பிரசுரங்கள்!

## மாணவிகளுக்கு அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினார் !

தாராபுரம், அக். 20 - தாராபுரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பள்ளி மாணாக்கர்களுக்கு நடத்தப்படும் வினாடி- வினா போட்டிகள் பற்றிய விவரங்கள், நிபந்தனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை புனித அலோசியஸ் பள்ளி மாணவிகளுக்கு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவிகள் மாணவிகளுக்கான வினாடி - வினா போட்டிகள் இணையதளம் மூலம் நடைபெறவுள்ளன. திராவிட நட்சத்திரங்களுக்கான வினாடி - வினா போட்டியாக நடைபெறும் நிகழ்ச்சி செப்டம்பர் 15 முதல் அக்டோபர் மாதம் 20 ம் தேதி வரை நடைபெற உள்ளது. மூன்று சுற்றுகளாக நடைபெறும் போட்டியில் மூன்று பேர் கொண்ட குழு போட்டியாக நடைபெறும். போட்டிகளில் வெற்றி பெறும் மாணவ, மாணவிகளுக்கு முதல் பரிசு ரூ.10 லட்சம், இரண்டாம் பரிசு ரூ.6 லட்சம், மூன்றாம் பரிசு ரூ3 லட்சம் என அறிவிக்கப்பட்டுள்ளது. பள்ளி மாணவர்கள் இடையே நடத்தப்படவுள்ள இந்த வினாடி வினா போட்டி பற்றிய விவரங்கள் விதிமுறைகள், எப்படி கலந்து கொள்வது என்பது பற்றி துண்டு பிரசுரங்களை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் தாராபுரம் அலோசியஸ் பெண்கள் பள்ளிக்கு நேரில் சென்று வழங்கினார்.

இதேபோல தாராபுரம் சிஎஸ்ஐ பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தாராபுரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளருமான சரஸ்வதி ராஜேந்திரன் தலைமையில் மகளிர் அணியினர் நேரில் சென்று அங்குள்ள மாணவி, மாணவிகளுக்கு போட்டி நிபந்தனைகள் அடங்கிய துண்டு

பிரசுரங்களை வழங்கினர். போட்டியின் நிபந்தனைகளாக துண்டு பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது பள்ளி மாணாக்கர்களுக்கு 18 வயது பிரிவில் போட்டி நடைபெறும் முதல் சுற்று போட்டியானது ஆன்லைன் வினாடி வினா போட்டியாக நடைபெறும். இரண்டாவது சுற்று மண்டல அளவில் 3 பேர் கொண்ட குழு போட்டியாக நடைபெறும் அரையிறுதி, இறுதிச்சுற்று பிரமாண்டமாக சென்னையில் நடைபெறவுள்ளது. *www.kalaignar100.co.in* என்ற இணைய தளத்தில் அலைபேசி எண்ணை கொண்டு பதிவு செய்யவும் மூன்று நபர்கள் கொண்ட குழுவாக மட்டுமே பதிவு செய்ய இயலும், 100 வினாடிகளில் 50 கேள்விக்கு பதில் அளிக்கும் வாய்ப்பை பெறுவீர்கள். அதிகப்படியான சரியான பதில்களை பெறுவதே போட்டியின் குறிக்கோள். அதிக புள்ளிகளை பெற ஒரு குழுவிற்கு அக்டோபர் 20ம் தேதிக்குள் 100 வாய்ப்புகள் தரப்படும். போட்டியில் கலந்து கொள்வதை பதிவு செய்ய நிச்சயம் ஒரு அலைபேசி எண் தேவை. பதிவு செய்த பின்னர் இந்த அலைபேசி எண்ணை வேறு எண்ணாக மாற்ற இயலாது பதிவு செய்யப்பட்ட எண் யாரிடமும் பகிர்ந்து கொள்ளப்படாது. இது ஒரு குழுவினருக்கான போட்டி, மூன்று நபர்கள் இல்லாமல் நீங்கள் போட்டியை துவங்கினாலும் அடுத்த கட்டத்திற்கு முன்னேற முடியாது. முதல் சுற்று மட்டுமே ஆன்லைனில் நடைபெறும். இதற்கு பின்னர், அடுத்தடுத்த சுற்றுகள் அரங்குகளில் நடத்தப்படும் சிறப்பு நிகழ்வாகவே இது இருக்கும். எனவே பள்ளி மாணவ, மாணவிகள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி ஓட்டுகளில் கலந்து கலந்து கொண்டு பரிசுகளை பெறலாம்.

இந்த போட்டிக்கு படிக்க வேண்டிய புத்தகங்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய நெஞ்சுக்கு நீதி, க.திருநாவுக்கரசு எழுதிய நீதிக்கட்சி வரலாறு, திருவல்லிக்கேணி முதல் திருவாரூர் வரை என்ற புத்தகம், கலைஞர் செதுக்கிய தமிழகம் திராவிட இயக்க வரலாறு, காலத்தின் நாயகன் கலைஞர், தமிழ் மறுமலர்ச்சியும் திராவிட தேசியமும், கி.வீரமணி எழுதிய திராவிடர் கழக வரலாறு. தெற்கிலிருந்து ஒரு சூரியன் என்ற தொகுப்பு நூல், திரு நாவுக்கரசு எழுதிய திராவிட இயக்கமும் திரா விட நாடும், தி.மு.க. வரலாறு ஒன்று. இரண்டு, மூன்று பாகங்கள், எஸ்.ஜே.சாதிக் பாஷா எழுதிய மாநில சுயாட்சி ஏன்? என்ற புத்தகம், முரசொலி மாறன் எழுதிய மாநில சுயாட்சி, ஏ. எஸ்.பன்னீர் செல்வம் எழுதிய கலைஞர் மு.கருணாநிதி வரலாறு ஆகிய புத்தகங்களில் இருந்து வினாடி வினாக்கள் தொகுப்பு கேள்விகளாக கேட்கப்படும். இப்போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் இந்த புத்தகங்களில் இருந்து தேவையான பதில்களை படித்து அறிந்து போட்டியில் கலந்து கொள்ளலாம்.

இந்நிகழ்ச்சியில் தாராபுரம் நகரக் கழகச் செயலாளர் சு.முருகானந்தம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே. எஸ்.தனசேகர், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் க. செல்வராஜ், நகர அவைத் தலைவர் கதிரவன், மாவட்டப் பிரதிநிதி செந்தில்குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் ஹைடெக் அன்பழகன், மாவட்ட சமூக வலைதள மகளிர் அணி பொறுப்பாளர் அமுதவல்லி, மாவட்ட மகளிர் தொண்டரணி சசிகலா, நகர்மன்ற உறுப்பினர்கள் புனிதா சக்திவேல், முத்துலட்சுமி, செலின் பிலோமினா, சாஜிதாபானு, தொழிலாளர் அணி மாவட்ட தலைவர் ஜெயக்குமார், ஆதிதிராவிடர் நலக் குழு உறுப்பினர் கே.வி.சிவசங்கர், வார்டு பொறுப்பாளர் ஜான்பால், கழகத் தோழர்கள் அகமது பாட்சா, தில்லைமுத்து, பாண்டியன், பழனிச்சாமி, பிரபாகரன் கார்த்தி உள்பட தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாணவிகள், கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கோவையில் அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில்

# இதழாளர் - கலைஞர் சிறப்பு புகைப்படக் கண்காட்சி திறப்பு விழா!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - கே.எஸ்.மஸ்தான் - த.மனோ தங்கராஜ் - 'இந்து' என்.ராம் பங்கேற்பு !

கோவை, அக். 20 - கோவை, வ.உ.சி மைதானத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா- இதழாளர் - கலைஞர் குழுவின் சார்பில் இதழாளர் - கலைஞர் சிறப்பு புகைப்படக் கண்காட்சி அரங்கத்தினை நேற்று முன்தினம் (18.10.2023) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில், இதழாளர் - கலைஞர் நூற் றாண்டு விழாக் குழுத் தலைவர் / தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இதழாளர் - கலைஞர் நூற்றாண்டு விழாக் குழு இணைத் தலைவர் / சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி. கே.எஸ்.மஸ்தான், இதழாளர் - கலைஞர் நூற்றாண்டு விழாக் குழு இணைத் தலைவர் / பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் பாரதிய வித்யா பவன் மற்றும் குமரகுரு கல்வி நிறுவனங்கள் தலைவர் டாக்டர்.பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் திறந்து வைத்தார்.

இவ்விழாவில் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர் / இதழாளர் - கலைஞர் நூற்றாண்டு விழாக் குழு உறுப்பினர் செயலர் த.மோகன், மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்தி குமார் பாடி, இதழாளர் கலைஞர் குழுவின் உறுப்பினர்களாகிய என். ராம் (ஹிந்து நாளிதழ்), நக்கீரன் கோபால், பாபுஜெயகுமார் (டெக்கான் க்ரோனிக்கல் நாளிதழ்), அருண்ராம் (டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழ்) கோவி. லெனின் (பத்திரிக்கையாளர்), எம்.குணசேகரன் (எடிட்டர் சன் டிவி), செந்தில்வேலவன் (வேல்வீச்சு), மாநகராட்சி மேயர் திருமதி.கல்பனா ஆனந்தகுமார், மாநகர காவல் ஆணையர் வி.பால கிருஷ்ணன், முன்னாள் அமைச்சர்கள் கண்ணப்பன், பொங்களூர் பழனிச்சாமி, மாநகராட்சி துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் நா.கார்த்திக், மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர். மோ.ஷர்மிளா மண்டலக் குழு தலைவர் திருமதி. மீனாலோகு, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. சுமா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இப்புகைப்படக் கண் காட்சியில் பன்முக கலைஞரின் பல்வேறு பரிமாணம், தமிழ் அறிஞர்களுடன், அரசியல் ஆளுமைகளுடன், பிரதமர்களுடன் முத்தமிழ் அறிஞர் கலைஞர், குடியரசுத் தலைவர்களுடன் முத்தமிழ் அறிஞர் கலைஞர், ஏனைய பத்திரிக்கைகள் தீபாவளி மலர் வெளியிட்டு வந்த நிலையில் கலைஞர் மட்டும் முரசொலி பொங்கல் மலர் வெளியிட்டார் உள்ளிட்ட தலைப்புகளில் புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நிகழ்ச்சியில் இதழாளர் - கலைஞர் நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர் / தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசிய தாவது :-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாக கொண்டாட, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12 சிறப்புக் குழுக்கள் அமைத்து, ஒவ்வொரு குழுவின் சார்பில் ஒவ்வொரு பகுதியிலும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தவேண்டும் உத்தர விட்டிருந்தார்கள். அந்த 12 குழுக்களில் இதழாளர் கலைஞர் குழுவின் சார்பில், இந்நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது. முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்கள், பத்திரிக்கையாளராக தன்னுடைய வாழ்க்கையை துவங்கி, பள்ளி பருவத்தில் மாணவ நேசன் என்ற கையெழுத்து பிரதியை துவக்கி, முரசொலி வரை இதழாளராக திகழ்ந்தார். குடியரசு பத்திரிக்கையின் துணை ஆசிரியராக பணியாற்றினார். கால்பதித்த அத்தனை துறை களிலும் தன்னுடைய சாதனைபடைத்தவராக திகழ்பவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இதழாளராக வாழ்க்கையை தொடங்கி அவருக்கு, இதழாளர் குழு சார்பில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அவருடைய வாழ்க்கை வரலாற்றை புகைப்பட க்கண் காட்சியாக நடத்தப்பட்டுள்ளது. மேலும், இதனைத் தொடர்ந்து, ஹிந்துஸ்தான் கலையரங்கத்தில் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. அதன் முன்னோட்டமாக இந்நிகழ்ச்சி முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுடன் தொடங்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தின் நான்காவது தூண்களில் ஒன்றான பத்திரிக்கையை காப்பாற்றுவதில் எவ்வாறு செயல்படவேண்டும் என்பதை மற்றவர்களுக்கு வழிகாட்டக்கூடிய வகையில் செயல்பட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அய்யா அவர்கள் ஆவார். அந்த வகையில் இதழாளர் குழுவில் எங்களை எல்லாம் சேர்த்து, இந்நிகழ்ச்சியை கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடத்த அனுமதி அளித்த முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பாரதிய வித்யா பவன் மற்றும் குமரகுரு கல்வி நிறுவனங்கள் தலைவர் டாக்டர்.பி. கே.கிருஷ்ணராஜ் வானவராயர் பேசியதாவது :-

இப்புகைப்படக்கண் காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகைப்படங்கள் எல்லாம் உங்களுக்கு வெறும் படங்களாக தெரியும். ஆனால் , நாங்கள் அந்த சம்பவங்கள் நடந்தபோது அதனை பார்த்த தலைமுறையினர். இந்த புகைப்படங்களை பார்த்த போது மிகவும் வியப்பாக இருந்தது. அவர் ஒரு சாதாரண மனிதர் அல்ல. அசாதாரண மனிதர். கால் பதித்த அத்தனை துறைகளிலும் முத்திரை பதித்தவர். இப்புகைப்படக் கண்காட்சியினை திறந்து வைக்க என்னை அழைத்தபோது, மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டேன். இன்று இப் புகைப்படக் கண்காட்சியினை திறந்து வைத்ததை பெருமையாக கருதுகிறேன். கலைஞர் அவர்களை அரசியல் வட்டத்திற்குள் மட்டும் வைத்து பார்க்கக் கூடாது. அவரது பொதுவாழ்க்கையை நாம் அறிந்துகொண்டால், தமிழ்நாட்டில் 100 ஆண்டு கால பொது வாழ்க்கையை நாம் தெரிந்துகொண்டதாக கொள்ளலாம். ஏனெனில் அவர்கள் அரசியல் மட்டுமல்லாமல், பல துறைகளிலும் தடம்பதித்தவர். ஒவ்வொரு துறையின் பரிணாம வளர்ச்சியையும் தெரிந்துகொள்ளவேண்டுமானால் அவருடைய வரலாற்றைப் படித்தால் போதும். அகில இந்திய அரசியலில் ஈடுபாடு கொண்டவர். இன்றைய தலைமுறையினரும் இப்புகைப்படக்கண்காட்சியினை பார்த்து பயன்பெற வேண்டும்.

இவ்வாறு டாக்டர்.பி. கே.கிருஷ்ணராஜ் வானவராயர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் இதழாளர் கலைஞர் குழுவின் உறுப்பினர் என்.ராம் (ஹிந்து நாளிதழ்) பேசியதாவது :-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பேச்சு சுதந்திரத்தை, எழுத்து சுதந்திரத்தை மதித்தார். பத்திரிக்கையாளர்கள், ஊடகவியல் பிரதிநிதிகள் எப்போது சென்றாலும் அவரைச் சந்திக்கலாம். கலைஞரும் விகடனும் என்று ஒரு புத்தகம் வெளிவந்தது. அப்புத்தகத்தில் 'நானும் நிருபராக இருந்தவன்தான்' என்ற ஒரு பக்கம் செய்தி இடம் பெற்றிருந்தது. அதில் 'முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஊட்டி செல்வதற்காக கோயம்புத்தூர் மாவட்ட சுற்றுலா மாளிகையில் தங்கி இருந்தார். பத்திரிக்கையாளர்கள் அவர்களிடம் காவேரி பிரச்சனை பற்றி கேள்விகளை கேட்டுகொண்டிருந்தனர். பல்வேறு பத்திரிக்கையாளர்கள் கேள்விகளை கேட்டுக்கொண்டிருந்தனர். அப்போது கலைஞர் அவர்கள் நானும் நிருபராக இருந்திருக்கிறேன். ஒரு நேரத்தில் ஒரு கேள்வியை கேளுங்கள். அதற்கான பதிலை கூறும்போது, அதை பத்திரிக்கையாளர் எழுதுவதற்கு நேரம் வேண்டும். எனவே, ஒவ்வொரு கேள்வியாக கேளுங்கள் என கூறி னார்கள்' இதுதான் அவருடைய சிறப்பாகும்.

அர்த்தமுள்ள கட்டுரைகள், கவிதைகளையும் எழுதியுள்ளார்கள். மாநில சுயாட்சி பற்றி பல கட்டுரைகள் எழுதியுள்ளார்கள். 'எழுத்தாளராக இருக்க வேண்டும் என்றால் சிந்தனை செய்தால் மட்டும் போதாது தொடர்ந்து, எழுதிக் கொண்டே இருக்க வேண்டும்.' சிந்தனையும், எழுத்தும் ஒன்றாக இருந்தால்தான் அவர் ஒரு சிறந்த எழுத்தாளர் என்று ஆர். கே.நாராயணன் கூறியு ள்ளார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பாதையில் முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகின்றார்கள். இதழாளர் கலைஞரின் சிறப்பை இன்றைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் எடுத்துச் செல்ல வேண்டியது நம்முடைய கடமையாகும்.

இவ்வாறு என்.ராம் (இந்து நாளிதழ்) பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கலை பண்பாட்டுத் துறை சார்பில் கிராமிய நையாண்டி மேளம், ரோஜா ஜிக் காட்ட கலைக்குழு, ஆராதனா ஸ்கூல் ஆப் டேன்ஸ் - பரதநாட்டியம், மற்றும் இந்துஸ்தான் கல்லூரி மாணவ மாணவியர்களின் சிலம்பாட்டம் ஆகிய கலைநிகழ்ச்சியினை அமைச்சர் பெருமக்கள், பொதுமக்கள் என ஏராள மானவர்கள் பார்வையிட்டனர்.

### தஞ்சை வடக்கு மாவட்டத்தில்

# கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாணவர்களுக்குப் போட்டிகள்!

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. – செ.இராமலிங்கம் எம்.பி. – மு.சண்முகம் எம்.பி. – சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. – முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தஞ்சாவூர் அக். 20 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க இலக்கிய அணி சார்பில் மாவட்ட அளவிலான பள்ளி மாணவ, மாணவியருக்கான கலைஞரின் கவிதைகள், திரை வசனங்கள் ஒப்பித்தல் போட்டி கும்பகோணத்தில் 22.10.2023 ஞாயிறு அன்று நடைபெற உள்ளது.

மாவட்ட தலைவர் ச. பார்த்திபன் தலைமையில் நடைபெறும் விழாவில், மாவட்ட அமைப்பாளர் கே.கே.எஸ்.ராஜா வரவேற்புரையாற்றுகிறார். கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் மாநிலச் செயலாளர் அர.திராவிடம், கும்பகோணம் மாநரக் கழகச் செயலாளர் - துணை மேயர் சு.ப. தமிழழகன், மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் நிர்வாகிகள் ம.சம்பத், எம்.நெடுஞ்செழியன், வி.மாரி, டி.எம். முபாரக்ஹூசைன், ப.பாரி, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

போட்டிகளில் வெற்றி பெறும் மாணவ, மாணவியருக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி, செ.இராமலிங்கம் எம்.பி, மு.சண்முகம் எம்.பி, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ ஆகியோர் பரிசுகளை வழங்கி சிறப்பிக்க உள்ளனர்.

போட்டிகளின் நடுவர்களாக மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆடுதுறை மு.உத்திராபதி, புலவர் முத்து வாவாசி, முனைவர் மு.செல்வ சேகரன், பி.சௌந்தர்ராஜன், முனைவர் ஏ.எஸ்.மூர்த்தி ஆகியோர் செயல்பட உள்ளனர்.,

சங்கரா டி.வி.புகழ் வெ.பூர்ணிமா நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்துகிறார். இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள் க.நசீர் முகமது, கோவி.அய்யாராசு, ஜெ.நடராஜன், எஸ். துரைமுருகன், ஜெயலெட்சுமி நடராஜன், உள்ளிட்ட தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநிலக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

கூட்ட நிறைவில் மாவட்ட துணை அமைப்பாளர் பந்தநல்லூர் க.மதியழகன் நன்றியுரையாற்றுகிறார்.



சேலம் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் ராமநாயக்கன்பாளையம் ஊராட்சியில் அப்பகுதி மக்கள் நீண்ட நாள் கோரிக்கை வைத்ததையடுத்து கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 லட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட பகுதி நேர நியாய விலைக் கடையை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். பொன். கௌதம சிகாமணி மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.நிகழ்ச்சியில் ஆத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளர் டாக்டர் வே.செழியன், பேரூர் செயலாளர் காங்கமுத்து, பொதுக்குழு உறுப்பினர் சந்திரமோகன் ,மாவட்ட கவுன்சிலர் நல்லம்மாள், ஒன்றிய துணை செயலாளர் சசிகுமார், மஞ்சினி செல்வராஜ், ராஜவேல்,வரதராஜன், அரசு, கிருஷ்ண மூர்த்தி, சிவசக்தி, முருகன்,பைத்தூர் ரவி, மதியழகன், கனகசபை,ஒன்றிய கவுன்சிலர் சேகர்,ஊராட்சி மன்ற தலைவர் அபிராமி மலைபெருமாள், கல்லை ராஜேந்திரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சிவராமன், கருணாநிதி, சேட்டு, பூக்கடை ராஜா, சிவாஜி, செல்வம், கனகராஜ், முத்து, கவிதா, வெண்ணிலா காசி, இளங்கோ, அன்பழகன், மனோகரன், மணி, பாலசுப்பிரமணி, செல்லமுத்து, தண்டபாணி, சின்னசாமி,லியோ, வேலுமணி, நடராஜ், பிரபு, பாலு, படையப்பா, தினேஷ், ரஜினி, சுரேஷ், அருண்குமார், சதீஷ்குமார், காளிமுத்து, ஆதிமூலம், ஸ்ரீதர், சுரேஷ், சதீஷ், சங்கீத், ராமதாஸ், வல்லரசு கூட்டுறவு துறை அதிகாரிகள் கந்தன், அறிவழகன், மீனாட்சி, ஜோதி, செந்தில்,வட்டார வளர்ச்சி ஆணையாளர் அசோகன், செந்தில் ,ஊராட்சி செயலாளர் மாயவன் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் கீழையூர் மேற்கு ஒன்றியம் மேலவாழக்கரை ஏர்வாடி கிராமத்தில் இருந்து திருக்குவளை, திருவாரூர் வழியாக புதிய வழித்தடத்தில் அரசு பேருந்தை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் கொடி அசைத்து வைத்து தொடங்கி வைத்தார். உடன் நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜானிடாம்வர்கீஸ், கீழ்வேளூர் சட்ட மன்ற உறுப்பினர் நாகைமாலி, கீழையூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் சோ.பா.மலர்வண்ணன், பொதுக்குழு உறுப்பினர் கோ.சிவக்குமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் தனபால், கலைச்செல்வம் மற்றும் பலர் உள்ளனர்.

## ‘நீட்’ தேர்வை ரத்துச் செய்யக் கோரி நாளை தொடங்கும்

# மாபெரும் கையெழுத்து இயக்கத்தை வெற்றிகரமாக நடத்திடுவீர்!

## ஆலோசனைக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, அக். 20 -**

**தி.மு.கழக இளைஞர் அணி - மாணவர் அணி, மருத்துவர் அணி இணைந்து ‘நீட்’ தேர்வை ரத்து செய்யக் கோரி மாபெரும் கையெழுத்து இயக்கம் நடத்துவது குறித்து மாவட்ட - மாநகர அமைப்பாளர்களின் ஆலோசனைக் கூட்டம் காணொலி காட்சியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசும் போது, “இந்த மாபெரும் கையெழுத்து இயக்கத்தை வெற்றிகரமாக நடத்திடுவீர்” என்று வேண்டுகோள் விடுத்தார்.**

இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டில் ஒவ்வொரு அணிக்கும் தலைவர் அவர்கள் நிறையப் பணிகள் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பணிகளையெல்லாம் ஒவ்வொரு அணியினரும் போட்டிப்போட்டுக் கொண்டு சிறப்பாகச் செய்துகொண்டிருக்கின்றோம்.

பரபரப்பான இந்தக் கழகப் பணிகளுக்கு மத்தியில் நம்முடைய மாநில உரிமை தொடர்புடைய நாம் மக்களுக்கு அளித்த வாக்குறுதி தொடர்புடைய விஷயங்கள் குறித்துத் தொய்வின்றி இயங்கவேண்டியது மிகமிக அவசியம்.

அந்தவகையில் ‘நீட் தேர்வை ரத்துச் செய்ய வேண்டும்’ என்ற நம் மாணவர்களின் கல்வி உரிமைக்கான கழகத்தின் கோரிக்கையை நிறைவேற்ற ஒன்றிய அரசுக்கு அழுத்தம் தரவேண்டியது மிகவும் அவசியமான ஒன்று.

### முதலில் பலி அனிதா!

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் மறைவுக்குப் பிறகு அடிமை அ.தி.மு.க.வினர் ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக பா.ஜ.க.வுக்குப் பயந்து நீட் தேர்வை தமிழ்நாட்டுக்குள் அனுமதித்தார்கள். முதல் பலி தங்கை அனிதா தன் உயிரை மாய்த்துக்கொண்டார். மருத்துவராகும் கனவோடு படித்த நம் வீட்டுப் பிள்ளைகளில் பலர் அடுத்தடுத்து தற்கொலை செய்ய அவர்களால் தள்ளப்பட்டார்கள். அதைத் தொடர்ந்து நாம் பல போராட்டங்களை நடத்தி, அடிமை அ.தி.மு.க. அரசுக்கும் பாசிச பா.ஜ.க. அரசுக்கும் பல்வேறு வகையில் அழுத்தம் கொடுத்திருக்கின்றோம்.

கழக அரசு அமைந்த ஒரே மாதத்தில், நீட் தேர்வு குறித்து முழுமையாக ஆராய்ந்து மாணவர்களின் நலன் காக்கும் வகையில், அரசுக்குப் பரிந்துரைகள் அளித்திட, ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.கே.இராஜன் தலைமையில் உயர்நிலைக் குழுவை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அமைத்தார்கள். அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ‘தமிழ்நாடு மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம் 2021’ என்ற சட்டமுடிவு, ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்காக ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டது.

### நீட் : ஒன்றிய அரசுக்கு தொடர்ந்து வலியுறுத்தல்!

இந்தச் சட்ட முன்வடிவுக்கு ஒப்புதல் அளிக்காமல், ஒன்றிய அரசு மௌனம் காத்து வரும் நிலையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவின் மீது, குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலை விரைவாகப் பெற்றுத் தருமாறு ஒன்றிய அரசை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

நம்முடைய அரசு அமைந்த பிறகு கடந்த ஆகஸ்ட் 20ஆம் தேதி இந்த மூன்று அணிகளின் சார்பாக, நம்முடைய எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் மாநிலம் தழுவிய மாபெரும் உண்ணாநிலை அறப்போராட்டத்தை நடத்தி முடித்தோம்.

கட்சியைக் கடந்து பொதுமக்கள் பெருமளவில் கலந்துகொண்ட அந்த உண்ணாநிலை அறப்போராட்டம் மிகப்பெரிய அளவில் வெற்றிபெற்றது. ‘நீட் தேர்வுக்கு எதிரான தமிழ்நாட்டு மக்களின் மனநிலை நீர்த்துப்போகவில்லை. அந்த எதிர்ப்பு அப்படியே இருக்கிறது’ என்பதை ஒன்றிய அரசுக்கு உணர்த்தும் வகையில், அந்தப் உண்ணாவிரத அறப்போராட்டம் அமைந்திருந்தது. அந்த நேரத்தில் என்னுடன் கலந்து அந்த உண்ணாவிரத அறப்போராட்டத்தை வெற்றிப் பெற செய்த உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.



நீட் தேர்வை ரத்து செய்வதற்காக கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சார்பில் தொடங்கப்படவுள்ள மாபெரும் கையெழுத்து இயக்கம் தொடர்பாக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி, மாவட்ட மாநகர அமைப்பாளர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் காணொலி வாயிலாக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை வழங்கினார். இதில் அணிகளின் தலைவர்கள், இணை, துணைச் செயலாளர்கள் முன்னிலை வகித்தனர்.

அந்தப் போராட்டத்திலேயே, ‘நீட் தேர்வு எதிர்ப்புப் போராட்டத்தை நாம் மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும்’ என்று குறிப்பிட்டுப் பேசியிருந்தேன். நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அதற்கான முன்னெடுப்பா கத்தான் வருகின்ற 21ஆம் தேதி கையெழுத்து இயக்கத்தை நாம் தொடங்கவுள்ளோம்.

50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துகளைப் பெறும் வகையில் நம் தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை இந்திய ஒன்றியத்துக்கு உணர்த்தும் வகையில் இந்தக் கையெழுத்து இயக்கம் இருக்க வேண்டும். அதற்காக நாம் ஒவ்வொருவரும் உழைத்தால்தான் அதைச் சாத்தியமாக்க முடியும்.

மக்களின் கையெழுத்துகளைப் பெறுவதற்காகப் போஸ்ட் கார்ட் மற்றும் இணையதளம் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டு உள்ளது. போஸ்ட் கார்டு என்பது ஓர் அடையாளத்துக்குத்தான். அனைவரின் கையெழுத்தையும் டிஜிட்டலாகப் பெற வேண்டும் என்பதுதான் நம்முடைய முழு இலக்கு.

ஏனெனில், அதில் ஒவ்வொருவரும் கையெழுத்து இட இட, நீட் தேர்வுக்கு எதிராக எத்தனை பேர் கையெழுத்து இட்டுள்ளனர் என்ற கவுன்ட் டிஜிட்டலாக அந்த வெப்சைட்டில் தெரியும். அதனால் உறுப்பினர் சேர்க்கைக்குப் படிவங்களை எடுத்துச் செல்வது போல் ஐபாட், டேப்களை எடுத்துக்கொண்டு ஊர் ஊராகச் சென்று வீடு வீடாக ஏறி நாம் கையெழுத்தைப் பெற வேண்டும்.

### ஒரு அணிக்கு தலா 3 ஊராட்சிகள்!

ஒரு ஒன்றியத்தில் 15 ஊராட்சிகள் இருந்தால், ஓர் அணிக்கு தலா 3 ஊராட்சி... என இந்தப் பணியை நம் மூன்று அணி நிர்வாகிகளும் தங்களுக்குள் பேசி பிரித்துக் கொண்டு மக்களிடம் கையெழுத்துப் பெறுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். எந்த மாவட்டத்தில் கையெழுத்து அதிகமாகப் பெறப்பட்டுள்ளது, எந்த மாவட்டத்தில் குறைவாகப் பெறப்பட்டுள்ளது என்பதையும் இதில் நாம் எளிதாக எடுத்துவிட முடியும். கவுன்ட் காட்ட வேண்டும் என்பதற்காக இல்லாதவர்களின் பெயர்களைப் போலியாக எழுதி, ஏதோ 10 நம்பர்களைப் போன் நம்பர் என டைப் செய்வது போன்ற தவறான விஷயங்களைத் தயவுசெய்து தவிர்க்குமாறு, நான் உங்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

### குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படும்!

50 நாட்களில் பெறப்படும் கையெழுத்துகளை நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களிடம் சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணியின் மாநாட்டில் அவர்களுடைய கையில் ஒப்படைக்கப்படும். பிறகு முறைப்படி அறிவாலயத்தின் வழியாக, அவை குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

மாநாட்டுக்கு இன்றிலிருந்து சரியாக இன்னும் 59 நாட்களே உள்ளன. 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துகள் என்று இலக்கு வைத்துள்ளோம் என்பதை நீங்கள் நினைவில் கொண்டு இயங்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். கையெழுத்துப் பெறும்போது எதற்காக இந்தக் கையெழுத்துப் பெறுகிறோம் என்பதைப் பொதுமக்களிடம் எடுத்துச் சொல்லவும். தேவையெனில், நீட் தேர்வை ரத்து செய்யவேண்டியதன் அவசியம் குறித்த துண்டறிக்கைகளை விநியோகம் செய்தும் கையெழுத்துப் பெறலாம்.

### மக்களிடம் நெருக்கமாகக் கொண்டு சேருங்கள்!

இவை தவிர கல்லூரிகளுக்கு முன்பு kiosk அமைத்தும் மாணவர்களின் கையெழுத்துகளைப் பெறலாம். அது இந்த இயக்கத்தை இன்னும் மக்களிடம் நெருக்கமாகக் கொண்டுபோய்ச் சேர்க்க உதவும். இப்படிக் கையெழுத்து பெறுவதைத் தினமும் புகைப்படம், வீடியோ எடுத்து அவற்றைச் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் தங்களுடைய சமூக வலைத்தளப் பக்கங்களில் பகிர, நீங்கள் ஊக்கப்படுத்த வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

### மாவட்டச் செயலாளர்களுக்கு தகவல் தெரிவியுங்கள்!

21ம் தேதி கழக மாவட்டங்களில் நடைபெற உள்ள கையெழுத்து இயக்க தொடக்க நிகழ்ச்சிக்கு முறைப்படி மாவட்டச் செயலாளர் அவர்களிடம் தகவல் தெரிவித்து, திருமண மண்டபம் போன்ற இடங்களை முன்பதிவு செய்து, பொதுமக்களை, மாணவர்களை அழைப்பது போன்ற பணிகளை இப்போதிலிருந்தே நீங்கள் தொடங்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் 72 கழக மாவட்டங்களில் சென்னையில் உள்ள 6 மாவட்டங்களுக்கும் சேர்த்து, கலைவாணர் அரங்கில் இந்த நிகழ்ச்சி நடைபெறுகின்றது. இது தவிர, மீதி 66 கழக மாவட்டங்களுக்கும் தனித்தனியாக இந்தக் கையெழுத்து இயக்க தொடக்க நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இதில் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு பேச்சாளரை தலைமையில் இருந்து அனுப்ப உள்ளோம். அதற்கான அறிவிப்பும் நாளை வெளி வரும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இந்தக் கையெழுத்து இயக்கத்தை வெற்றிகரமாக முடிக்க ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக்கொண்டு, வந்திருந்த உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி மீண்டும் உங்கள் அத்தனைப் பேரையும் 21 ஆம் தேதி சென்னையில் நடக்கின்ற கூட்டத்தில் சந்திக்கின்றேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.




# திராவிட சினிமா 28

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

## திராவிட சினிமா இரட்டையர்!

■ **வீ.மா.ச.சுபகுணராஜன்**





படங்கள் உதவி : ஞானம்

திராவிட சினிமா குறித்த ஆய்வுகளில் பெரும்பான்மையாக கவனம் பெறாதவர்கள் அவற்றின் இயக்குநர்கள் என்பது கவனத்துக்குரியது. இதன் பொருள், திராவிட சினிமாவினர் அவற்றின் இயக்குநர்களை முக்கியமானவர்களாகக் கருதவில்லை என்பதல்ல. மாறாக, அந்த இயக்குநர்களுடனான உறவைப் பெரிதும் மதித்துப் போற்றியவர்கள் என்பதே உண்மை.

திராவிட சினிமா ஆய்வில், அந்தத் திரைப்படங்களைத் தொடர்ந்து இயக்கியவர்கள் விரல்விட்டு எண்ணும் எண்ணிக்கையிலானவர்களே என்பதும் கருதத்தக்கது. திராவிட சினிமா பற்றிய பார்வைகளில் முதன்மையான கவனத்தைப் பெறுபவை திரைக்கதைகளும் வசனங்களுமே. அவற்றின் அரசியல் பார்வையைக் கட்டமைத்த பேரறிஞர் அண்ணா மற்றும் கலைஞர் ஆகியோர் நேரடியாக இயக்கும் பணியை மேற்கொள்ளவில்லை.

திராவிட சினிமா இயக்குநர்களின் பட்டியலில் முதன்மையான இடம் கிருஷ்ணன் – பஞ்சு எனும் இரட்டையர்களுக்கே.

### அண்ணாவிடமிருந்து இரட்டையர் இயக்கம்!

இயக்குநர்கள் **கிருஷ்ணன் – பஞ்சு** தமிழ்த் திரையுலகம் கொண்டாடிய **'நல்லதம்பி'** (1949), **'பராசக்தி'** (1952), **'ரத்தக்கண்ணீர்'** (1954) போன்ற திரைக்காவியங்களை இயக்கியவர்கள். இரட்டையர்களாக இறுதிவரை திரையுலகத்தில் தொடர்ந்து, மாபெரும் வெற்றிகளைக் கண்டவர்களில் இவர்களே முதன்மையானவர்களும் ஆவார்கள்.

கலைஞருடனான இவர்களது பயணம் **'பிள்ளையோ பிள்ளை'** (1972), **'பூக்காரி'** (1973) வரை தொடர்ந்தது என்பது போதும், இவர்களின் கருத்தியல் 'புரிதலை' உறுதி செய்ய. சென்னையில் 1909–ஆம் ஆண்டில் பிறந்த கிருஷ்ணனின், திரைத்துறைப் பிரவேசம் கோவை பட்சிராஜா ஸ்டுடியோவில் (பழைய கந்தன் ஸ்டுடியோ) லேப் தொழிற்நுட்பம் தொடர்பில் தொடங்கியது. பஞ்சாபகேசன் என்ற பஞ்சு, 1915–ஆம் ஆண்டில் உமையாள்புரத்தில் (கும்பகோணம்) பிறந்தவர். இவரும் அதே ஸ்டுடியோவில் எடிட்டிங் துறையில் 'பஞ்சாபி' என்ற பெயரில் ராஜா சாண்டோ அவர்களிடமும், உதவி இயக்குநராக எல்லீஸ் டங்கனிடமும் பணிபுரிந்து வந்தார்.

இரட்டையர்களாக இவர்களது இயக்குநர் பயிற்சி ராஜா சாண்டோ அவர்களிடம், 'ஆராய்ச்சி மணி அல்லது மனுநீதிச் சோழன்' படத்தின் உதவி இயக்குநர்களாகத் தொடங்கியது. இவர்களின் திறமை கண்டு ராஜா சாண்டோ தனது அடுத்தத் திரைப்படமான **'பூம்பாவை'**யை (1947) இயக்கும் வாய்ப்பளித்தார்.



இரட்டையர்கள் அடுத்ததாக இயக்கியது, என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள் சிறை சென்றபோது அவருக்கு உதவ அவரது **'பைத்தியக்காரன்'** (1947) நாடகத்தைத் திரைவடிவமாக்கியது. என்.எஸ்.கே சிறையிலிருந்து மீண்டு தயாரித்து நடித்த அண்ணாவின் 'நல்லதம்பி' (1949) தான் இவர்கள் இயக்கிய முதல் திராவிட சினிமா எனலாம். அந்த வகையில், திராவிட சினிமாவின் முதன்மைப் படைப்பாளர் பேரறிஞர் அவர்களுடன் தொடங்கியது, இவர்களது கலைப்பயணம்.

> **சிவாஜி கணேசன், எம்.ஆர்.ராதா போன்ற மாபெரும் நடிப்புத் திறன் கொண்ட நடிகர்களின் உணர்ச்சிப் பொங்கும் முகமும் உச்சரிப்பும் படத்தின் நோக்கத்தை வெளிப்படுத்த வல்லவை.**

### கொள்கையும் ஒன்று, திரையிலும் இணைவு!

**'பராசக்தி'** மற்றும் **'ரத்தக்கண்ணீர்'** திராவிட சினிமா வரலாற்றில் இரண்டு போக்குகளைத் தீர்மானித்தவை அல்லது கோட்பாட்டுச் சட்டகங்களை அறிவித்த திரைப்படங்கள் எனச் சொல்லலாம்.

முதலாவதான கலைஞர் அவர்களின் 'பராசக்தி' திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைப் பிரகடனத் திரைப்படம். பெரியாரும் அண்ணாவும், கொள்கை ஒன்றுதான் எனினும், களமாடும் தளத்தேர்வில் முரண்பட்டு விலகிய போது அண்ணா உருவாக்கிய தி.மு.க, ஒரு வெகுமக்கள் அங்கீகாரம் வேண்டும் என்று தேர்தல் அரசியல் கட்சியாக மலர்ந்தது. இந்தத் தேர்தல் அரசியல் களத்தேர்வுக்காக, கொள்கை விலகாமல், நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டதை அறிவித்தது 'பராசக்தி'.

ஆனால், அதே வேளையில் அய்யாவின் கடுமையான நிலைப்பாடுகளைத் தயக்கமின்றிப் பேசியவர் **'நடிகவேள்' எம்.ஆர்.ராதா** அவர்கள். அந்த வகையில், அவருக்காகத் திராவிடர் கழகத்தின் **திருவாரூர் தங்கராசு** அவர்கள் எழுதிய **'ரத்தக்கண்ணீர்'**, திராவிடக் கழகத்தின் கொள்கை முழக்கம். கொள்கை ஒன்றெனினும் இரு துருவங்களாக இயங்கின இயக்கங்கள். ஆனால், திரைத்துறையில் கலைஞர்களாக 'திராவிட இயக்கத்தவர்' இணைந்தே செயல்பட்டனர்.

இரண்டு படங்களையும் தயாரித்தது, நேஷனல் பிக்சர்ஸ் பி.ஏ.பெருமாள் அவர்களே. இயக்கியது கிருஷ்ணன் – பஞ்சு. இயக்குநர் மற்றும் எடிட்டர்களான இரட்டையர்களின் இந்தப் படங்களில் நிறைய அணுக்கக் காட்சிகள் இருப்பதைக் காண முடிகிறது. சிவாஜி கணேசன், எம்.ஆர்.ராதா போன்ற மாபெரும் நடிப்புத் திறன் கொண்ட நடிகர்களின் உணர்ச்சிப் பொங்கும் முகமும் உச்சரிப்பும் படத்தின் நோக்கத்தை வெளிப்படுத்த வல்லவை. அதே போல எடிட்டர் இயக்குநர்களின் 'இடைவெட்டு' காட்சிகள் அழுத்தமானவை.

'பராசக்தி'யில் குணசேகரன் குமுறலில் குறுக்கிட எழும் வழக்கறிஞரை மறித்து, 'உனக்கேன் இந்த அக்கறை என்பீர்கள்' எனும் காட்சியும், 'ரத்தக்கண்ணீரில்' 'மனுசனுக்கு முக்கியம் கஞ்சியும் பஞ்சும்' என்று கூறி திண்ணையிலிருந்து 'எப்பா டேய்' என்பவருக்கு, 'கஞ்சியுமில்ல பஞ்சுமில்ல' எனும் வேலையாள் பதில் வெட்டி மறையும். படங்களின் காட்சி நுட்பம் குறித்து, விரித்து இன்னும் பேசலாம்.

### படத்தின் பேசுபொருளோடு இயல்பான தொடர்பு!

கிருஷ்ணன் பஞ்சுவைத் தொடர்ந்து ஏ.காசிலிங்கம், ப.நீலகண்டன் ஆகியோர் 'திராவிட சினிமா' இயக்குநர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

மேடை நாடகத் திரைக்கதை மற்றும் இயக்கம் ஆகியவற்றுடன், பேரறிஞர், கலைஞர் போன்றவர்கள் நாடக நடிப்பிலும் நீண்ட அனுபவம் கொண்டவர்களாக இருந்தனர். எனவே, அவர்களது திரைக்கதைகளில் காட்சியமைப்பும், காட்சிப் பிரிப்பும் இயங்கியதைப் போலவே நடிகர்களின் மேடை அசைவுகள், பேச்சுமுறைகள், உணர்ச்சி வெளிப்பாடுகள் ஆகியவை விரிவான 'குறிப்புகளாக' (PARENTHETICALS) காணப்படுகின்றன.

நாடக / திரைப்படக் காட்சிகளின் விளக்கம் போல, நடிகர்களுக்கான குறிப்புகளும் உண்டு. நடிகனின் மிகப் பெரிய சவால் 'கைகளே'. கைகளை எப்படி வைத்துக் கொள்வது, அசைப்பது என்பவை. அதிலும் காட்சியில் **'பேசாத'** நடிகரின் 'இருப்பு' சிக்கலானது. திரைக்கதைக் குறிப்புகள் எத்தனை விரிவாக எழுதப்பட்டிருந்தாலும், காட்சி உருவாக்கப் பணியைச் செய்யும் இயக்குநர், கதைக்களம், திரைக்கதை, வசனங்கள் ஆகியவற்றின் நோக்கத்தை முழுவதுமாக உள்வாங்கினால் மட்டுமே அந்தக் காட்சியை இயக்கி முடிக்க முடியும்.

எழுதப்பட்ட திரைக்கதையில் காட்சியின் விவரணை விரிவாக இருந்தாலும் அதனை 'காட்சித் துண்டுகளாக' பிரிக்கும்போதே காட்சியின் 'நோக்கத்தை' கவனத்தில் கொண்டே செய்யப்பட வேண்டும். காட்சிகளாகப் பிரிக்கும் போதும், இணைக்கும் போதும் ஓர் ஆழமான புரிதலைக் கோரும். காட்சிகள் பிரிக்கும் முறை, காட்சிகளின் கோணங்கள், நடிகரின் உணர்ச்சிகள் முழுமையாக 'குறிப்புகளில்' இருப்பதில்லை. எனவே, திரைப்பட உருவாக்கத் தளத்தைக் கையாளும் இயக்குநர், இந்த இடைவெளிகளை நிரப்புவதில் உள்ளார்ந்த புரிதலிலிருந்தே செயல்பட வேண்டும்.

காட்சித் துண்டுகளை இணைத்து இறுதி செய்யப்படும் திரைப்படத்தின் 'முதல் பிரதி' இயங்குநரின் மனத்திரையிலேயே காட்சியாகிறது. எனவே, திரைப்படத்தின் பேசுபொருளோடு, இயல்பாகத் தொடர்புறுத்திக் கொள்ளும் இயக்குநர்களே சரியான தேர்வாக இருக்கமுடியும். கிருஷ்ணன் – பஞ்சு அப்படியானவர்களாக இருந்தார்கள். இந்த இரட்டையர்கள் பிறப்பால் பார்ப்பனர்கள் எனப் பலரும் அறிந்திருக்கலாம். அவர்களது தொடர்ந்த திராவிட இயக்கத்தவருடனான பயணம், திராவிடம் ஒருபோதும் பிறப்பின் வழியான காழ்ப்பையோ, விரோதத்தையோ கொண்டிருந்ததில்லை என்பதற்குச் சாட்சி.

...படம் விரியும்

## பெரியார் காட்டும் பாதை!

ஓர்பால் ஈர்ப்பாளர்களின் திருமணத்தை அங்கீகரிப்பது தொடர்பான வழக்கில், உச்ச நீதிமன்றத்தின் நிலை கவலைக்குரியதாக இருப்பதாகப் பால்புதுமையினர் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் கருத்து தெரிவித்து வருகிறார்கள். 'இந்த விஷயத்தில் நாங்கள் முடிவெடுக்க முடியாது. நாடாளுமன்றம்தான் முடிவெடுக்க வேண்டும்' என்று பந்தை ஒன்றிய அரசிடமே தள்ளிவிட்டிருக்கிறது நீதிமன்றம். ஒன்றிய அரசோ அந்த வகைத் திருமணங்களைக் கலாசாரச் சீர்கேடாகப் பார்க்கிறது.

நவீன சிந்தனைகளில், முயற்சிகளில் உலகம் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், 90 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் தந்தை பெரியார் சொன்ன கருத்து இங்கு மிகவும் கவனிக்கத்தக்கது.

"ஒரு ஆணின் அல்லது ஒரு பெண்ணின் அன்பு, ஆசை, காதல், காமம், நட்பு, நேசம், மோகம், விரகம் முதலாகியவைகளைப் பற்றி மற்றொரு பெண்ணோ ஆணோ மற்ற மூன்றாமவர்கள் யாராவதோ பேசுவதற்கோ நிர்ணயிப்பதற்கோ நிர்பந்திப்பதற்கோ சிறிதுகூட உரிமையே கிடையாது என்றும் சொல்லுகிறோம்" என்று 1931–ஆம் ஆண்டு ஜனவரி 18 தேதியிட்ட **'குடிஅரசு'** இதழில் பெரியார் எழுதியிருக்கிறார். ஒருவேளை, உச்ச நீதிமன்றம் இந்த விஷயத்தில் பெரியாரைப் பின்பற்றினால், நல்ல தெளிவு கிடைக்கலாம்!

## :ப்ளாஷ்பேக்



### மைதானம் திறப்பு!

என் தாத்தா எஸ்.பழனியப்பன் அவர்கள் உடுமலைப்பேட்டைப் பகுதியில், முன்னாள் கழகப் பொருளாளர் சாதிக் பாட்சா அவர்களுடன் இணைந்து கழகம் வளர்க்க அரும்பாடுபட்டவர். அந்தப் பகுதியிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகவும் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்துள்ளார். இந்தப் படம், 1970–ஆம் ஆண்டு உடுமலை, நேதாஜி மைதானம் திறப்பு விழாவுக்கு, அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் வருகை தந்த போது என் தாத்தா நேரில் சென்று மாலை அணிவித்து வரவேற்றபோது எடுக்கப்பட்டது. என் போன்ற இளைஞர்கள், கழகத்தில் தீவிரமாகப் பணியாற்ற, தாத்தாவின் இந்தப் படங்கள் உந்துசக்தியாக இருக்கின்றன.



பாலசுப்பிரமணியன்

**-ஜெ.பாலசுப்பிரமணியன், உடுமலைப்பேட்டை நகரம், திருப்பூர் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை–600018. வாட்ஸ்அப் எண்: 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ஈரோட்டில் அச்சிடப்பட்ட 'திராவிட நாடு'

**1944–ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் சேலம், விக்டோரியா மார்க்கெட் மைதானத்தில் நீதிக் கட்சியின் 16–வது மாநில மாநாடு நடைபெற்றது. அப்போது மாநாட்டுப் பணிகளில் ஈடுபட்டிருந்ததால், பேரறிஞர் அண்ணா, தான் நடத்தி வந்த 'திராவிட நாடு' இதழை ஈரோட்டில், 'குடிஅரசு' அச்சிடப்படுகிற தமிழன் அச்சகத்திலேயே அச்சடித்தார். இதழ்கள் அங்கிருந்து காஞ்சிபுரம் எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்தே ஏஜெண்டுகளுக்கும், சந்தாதாரர்களுக்கும், முக்கிய நீதிக்கட்சித் தலைவர்களுக்கும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 275




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131